...ங்கள் எட்டு
விலை ரூபா 5-00

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

அசல் 22 கரட் தங்க
நகைகளுக்கு யாழ் நகரில்
சிறந்த ஸ்தாபனம்
அர்ச்சனா
ஜுவலர்ஸ்
118, கஸ்தூரியார் வீதி
176/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(கி-2127)

02 வள்ளுவர் ஆண்டு 2032 ஆடி 16 புதன்கிழமை (01-08-2001) தொலைபேசி: 3378 ஒலி: 233

## பொதுநலவாய நாடுகளின் கூட்டத்தில்

# ...னித உரிமை மீறல்கள் குறித்து
# ஜனாதிபதியிடம் வினவப்படும்!

### சர்வதேச மன்னிப்புச் சபை அறிவிப்பு

(நமது நிருபர்)

...லங்கையில் அரசினால் தொடர்ச்சியாக மீறப்பட்டு வரும் மனித உரிமைகள் தொடர்பாக அவுஸ்திரேலியாவில் நடைபெறவுள்ள பொதுநலவாய அமைப்பு நாடுகளின் கூட்டத்தில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவிடம் சர்வதேச மன்னிப்புச்சபை கேள்வி எழுப்பவுள்ளது.

...க் கூட்டம், ஒகடோபர் மாதம் 6ம் திகதி முதல் 9ம் திகதி வரை நடைபெறும்.

...பொது நலவாய அமைப்பு ...டுகளின் இக்கூட்டம் அவுஸ்...ரேலியா பிறின்ஸ்பேர்க் ...ில ஒகடோபர் மாதம் ... திகதி முதல் 9ம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் பொதுநலவாய அமைப்பைச்சேர்ந்த 50 நாடுகளின் தலைவர்கள் பங்கு கொள்கின்றனர்.

இலங்கையில் இருந்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவும் இந்தியாவில் இருந்து பிரதமர் வாஜ்பாயும் இதில் கலந்துகொள்கின்றனர். இவ் இரு நாட்டுத்தலைவர்களும் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளவிருப்பதால், இவர்களுக்குப் பலத்த பாதுகாப்பு வழங்குவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன

இக்கூட்டத்தில் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்காவிடம் இலங்கையில் அப்பட்டமாக நடைபெற்று வரும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக

(8ஆம் பக்கம் பார்க்க)

### ...னாதிபதியை சந்தித்த ஜே.வி.பி.
## சர்வஜன வாக்கெடுப்பை
## கைவிடுமாறு கோரிக்கை

(கொழும்பு)

...லைவைக்கப்பட்ட பாராளு...க்கூட்டத்தை உடனடி...க்கூட்ட வேண்டும் என்... சர்வஜனவாக்கெடுப்பை ...துமாறும் ஜனாதிபதி ...ரிக்கா குமாரதுங்காவை ...தித்த ஜே.வி.பியினர் ...ண்டுகோள் விடுத்துள்ள...

சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு கண்டு நெருக்கடியை நீக்குவதற்கு ஆதரவு தருமாறு ஜனாதிபதி ஜே.வி.பியிடம் வேண்டுகோள் விடுத்ததை அடுத்து அவர்கள் ஜனாதிபதியிடம் இவ்வாறு கோரியுள்ளனர்.

(8ஆம் பக்கம் பார்க்க)

## சர்வஜன வாக்கெடுப்பு
## நடத்தும் அதிகாரம்
## ...னாதிபதிக்கு இல்லை

(கொழும்பு)

...வஜன வாக்கெடுப்பை ...செய்ய வேண்டுமென ...ல் செய்திருந்த 13மனுக் ...நேற்று விசாரணைக்கு ...கொள்ளப் பட்டுள்...

...ல் அமைப்பு என்ன ... தெரியத நிலையில் ... அமைப்பொன்றை ...க்க சர்வஜன வாக்...பு நடத்த ஜனாதிபதிக்கு எந்த விதமான அதிகாரமும் இல்லை அரசியல் அமைப்பின் படி அப்படி ஒன்றும் செய்யமுடியாது என்று சட்டத்தரணிகள் மனுவின் சார்பாக வாதிட்டனர்.

இதனை அடுத்து மனுக்கள் மீதான பதில் இன்று சட்டமா அதிபர் அளிகக வேண்டுமென்று உத்தரவிட்ட நீதியரசர்கள் வழக்கை இன்று வரை ஒத்திவைத்தனர். (வ)

## ...க்கிய இடங்களை தாக்க
## ...டுதலைப்புலிகள் திட்டம்
### பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் தாக்கு...ல் நடத்த திட்டமிட்டுள்ள ...ங்களைப் பாதுகாப்ப...கு, பொலிசாருடன் படை...ரும் இணைந்து செயற் ...வேண்டுமென்று பொலிஸ் அதிபர் லககிகொடித்...க்கு தெரிவித்துள்ளார்.

...கந்திர முக்கியத்துவம் வாய்ந்த நிலையங்கள் மற்றும் நிறுவனங்கள் ஆகியவற்றின் மீது விடுதலைப்புலிகள் தாக்குவதற்கு திட்டமிட்டுள்ளனர்.

இவற்றின் பாதுகாப்பை அதிகரிக்கும் வகையில் பொலிசாரும் படையினரும் இணைந்து பாதுகாப்பில் ஈடு

(8ஆம் பக்கம் பார்க்க)

## ஈ.பி.ஆர்.எல்.எவ் உறுப்பினர்
### சுட்டுக்கொலை

(திருகோணமலை)

திருகோணமலை அன்பு வெளிபுரத்தில் விடுதலைப் புலிகளின் பிஸ்ரல் குழுவின் சூட்டுக்கு இலககாகி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் இடம் பெற்றசம்பவத்தில் ஈ.பி.ஆர்.எல்.எவ் வரதரணியைச் சேர்ந்த சிவா என்ற இளைஞரே கொல்லப்பட்டவராவார்.

(8ஆம் பக்கம் பார்க்க)

## தேன்நிலவைப் பாதித்த
## விமானத்தளத் தாக்குதல்
### நட்டஈடு கோரி வழக்கு

(கொழும்பு)

கட்டுநாயக்கா சர்வதேச விமானநிலைய விமானப் படைத்தளம் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் மேற் கொண்ட அடுத்த 24 மணி நேரத்தில், விமானநிலையத்துக்கு வந்தடைந்த வெளி நாட்டு விமானத்திலிருந்த புதுமணத்தம்பதியர், விமான நிலையத்தின் அலங்கோலத்தைக்கண்டு அதிர்ச்சியடைந்தனர்.

தேன்நிலவைக் கழிப்பதற்காக மொறிசியஸ் தீவுக்கு உல்லாசப்பிரயாணம் மேற்கொண்ட ஸ்கொட்லாந்தைச் சேர்ந்த இத்தம்பதியர், விமானத்தில் மாறி ஏறுவதற்காக

(8 ஆம் பக்கம் பார்க்க)

### திவ்வியன் ... வைத்திருந்ததாகக் கூறி
## பொலிஸாரால் மன்றில்
## ஆயுதம் சமர்ப்பிப்பு

(வடமராட்சி)

யாழ்பல்கலைக்கழக மாணவன் கிருஷ்ணசாமி திவ்வியன் நேற்று யாழ்நீதிமன்றில் பதில் நீதிபதி திருநாவுக்கரசு முன்னிலையில ஆஜர்படுத்தப்பட்டார்.

அவ்வேளை காங்கேசன் துறை தடுப்புமுகாம் புலனாய்வுப் பொறுப்பதிகாரி திவ்வியனிடமிருந்து கைப்பற்றப்பட்டதாகக்கூறி சில ஆயுதங்களை மன்றில்சமர்ப்பித்தார்,

சமர்ப்பிக்கப்பட்ட ஆர்.பி.ஜி.ரக மோட்டர்குண்டினை அழிப்பதற்கு புலனாய்வுப் பொறுப்பதிகாரி பதில் நீதவானிடம் அனுமதி கோரிய

(8ஆம் பக்கம் பார்க்க)

### நல்லூர் பிரதேசசபைக்குட்பட்ட
## பொது அமைப்புகளுக்கு
## நாளை நிதி வழங்கப்படும்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபையின் எல்லைகுட்பட்ட கோயில்கள் பாடசாலைகள், மற்றும் சன சமூக நிலையங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதிக்கான காசோலைகள வழங்கும் நிகழ்வு, நாளைவியாழக்கிழமைகாலை பத்து மணிககு வடக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சின் யாழ்

(8ம் பக்கம் பார்க்க)

# கட்டுநாயக்கா விமானத் தளத்தை
# பாதுகாக்க நாடுகள் உதவ வேண்டும்
### அமைச்சர் கதிர்காமர் வேண்டுகோள்

(கொழும்பு)

கட்டுநாயக்க விமானநிலையத்தை பாதுகாப்பதற்கு வேண்டிய உதவிகளையும ஆலோசனைகளையும் சர்வதேச நாடுகள் இலங்கைக்கு வழங்கவேண்டுமென்று வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் சர்வதேச சமூகத்தை பகிரங்கமாகக் கோரியுள்ளார்.

கடந்த திங்கட்கிழமை மாலை ஜனாதிபதியின் இல்லத்தில் வெளிநாட்டுத் தூதுவர்கள் அழைக்கப்பட்டு விசேட கூட்டமொன்று நடத்தப்பட்டது

இக்கூட்டத்தில் கட்டுநாயக்க விமானப்படைத்தளத் தாக்குதல் சம்பவம் குறித்து தூதுவர்களுக்கு விரிவாக விளக்கப்பட்டது.

இச்சந்திப்பின் போதே அமைச்சர் கதிர்காமர் மேற்க்கண்டவாறு கேரிக்கைவிடுத்தார்.

அங்கு அவர் தொடர்ந்து பேசுகையில்

கடடுநாயக்க சர்வதேச விமானநிலையத்தில்பலவெளிநாட்டு விமானங்கள்தரித்துச் செல்கின்றன இந்நிலையில் அங்கு விமானப்படைத்தளம் மீது விடுதலைப்புலிகளால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எனவேவிமானநிலையபடைத்தள பாதுகாப்பை அதிகரிக்கவும் உயர்த்தவும்வேண்டிய உதவிகளையும் ஆலோசனைகளையும் சர்வதேசசமூகத்

(8ம் பக்கம் பார்க்க)

...டுவே நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறு விளம்பரம்

### விற்பனைக்குண்டு

எங்களிடம் கோழி முட்டை றால் கருவாடு, சிரட்டைக் கரி மொத்தமாகவும், சில்லறையாகவும், நியாய விலையில் பெற்றுக் கொள்ளலாம். மல்லிகா - 149மின்சார நிலைய வீதி, பஸ் நிலையம் அருகாமை, யாழ்ப்பாணம்

(3412)

### விற்பனைக்கு

தரமான பாவித்த ஓடுகள் உடன் விற்பனைக்குண்டு தொடர்பு: ஞானம் பீடிக் கொம்பனி, நீர்வேலி கந்தசாமி கோயிலுக்கு அருகாமை நீர்வேலி. (C-2345)

## இடமாற்றம்

கட்டுநாயக்கா விமானப் படைத்தளம் மற்றும் விமான நிலையத்தில் கடமையாற்றும் சில பொறுப்புவாய்ந்த அதிகாரிகள் இடம் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக விமானப் படை அதிகாரி விங் கொமாண்டர் அஜித் விஜய சுந்தர அறிவித்துள்ளார்.

கடந்த வாரத்தில் இடம் பெற்ற கட்டுநாயக்க விமான படைத்தளம் மற்றும் விமான நிலையம் மீதான தாக்குதலுக்கு படை அதிகாரிகளின் அசமந்த போக்கே காரணமாகும். இதற்காகவே இவ்வதிகாரிகள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்கள் என்று விமானப்படை அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார். [உ-4]

## நேர்முகப் பரீட்சை

இளைஞர் யுவதிகளுக்கு தொழிற் பயிற்சி வழங்கும் திட்ட அடிப்படையில் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலக பிரிவில் புதிய அபிவிருத்தி தொண்டர்களை தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை இன்று காலை 8.00மணிக்கு நெல்லியடி ஈ.பி.டி.பி அலுவலகத்தில் நடைபெறும் என பிரதேச சபை உப தலைவர் உதயன் தெரிவித்துள்ளார். [உ-23]

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் பட்டமளிப்பு விழா 2001 வீடியோ, புகைப்பட பிடித்தல்**

யாழ். பல்கலைக்கழகத்தின் 20வது பொதுப் பட்டமளிப்புவிழா எதிர்வரும் 2001-10-06 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இவ்விழா நிகழ்வை வீடியோப் படம் எடுப்பதுடன் 1000 புகைப் படங்கள்வரை (போஸ்ட் காட் அளவுள்ள கலர்ப் புகைப்படம்) எடுக்க வேண்டியுள்ளதால் தகுதி வாய்ந்த வீடியோ, புகைப் படப்பிடிப்பாளர்கள் தங்களது விலைக்கூற்றை 2001-08-15ஆம் திகதிக்கு முன்னர் உதவிப் பதிவாளர், கல்விக்கிளை, யாழ்ப்பாணப்பல்கலைக் கழகம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

பதிவாளர்
யாழ். பல்கலைக்கழகம்
2001. 07. 3
(C/ 2339)

# பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

ஜூலை மாதம் 31 ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின்படி, வெளிமாவட்டங்களுக்குப்பயணம் செய்ய அனுமதிவழங்கப்பட்டவர்களின் இலக்கங்கள் பிரதேச ரீதியாகத் தரப்படுகின்றன.

### சாவகச்சேரி

| | |
|---|---|
| 201093 ஏ | 201093 பி |
| 202768 ஏ | 202930 ஏ |

### கரவெட்டி

| | |
|---|---|
| 172553 ஏ | 182226 ஏ |
| 182226 பி | 185489 ஏ |
| 185489 பி | 185611 ஏ |
| 185611 பி | 185611 சி |
| 189826 ஏ | 189826 பி |
| 189826 சி | 189826 டி |
| 189826 ஈ | 192608 ஏ |
| 194669 ஏ | 194669 பி |
| 196450 ஏ | 196450 பி |
| 196450 சி | 196638 ஏ |
| 196638 பி | 196795 ஏ |
| 196795 பி | 196795 சி |
| 196795 டி | 196861 ஏ |
| 196861 பி | 198174 ஏ |
| 198435 ஏ | 198435 பி |
| 200913 ஏ | 201002 ஏ |
| 201003 ஏ | 201003 பி |
| 201044 ஏ | 201045 ஏ |
| 281064 ஏ | 201064 பி |

| | |
|---|---|
| 301072 ஏ | 201072 பி |
| 201134 ஏ | 201143 ஏ |
| 201143 பி | 201143 சி |
| 202782 ஏ | 20?805 ஏ |
| 205805 பி | 202836 ஏ |
| 202836 பி | 202836 சி |
| 202485 ஏ | 202487 ஏ |
| 202487 பி | 202893 ஏ |
| 202899 ஏ | 202927 ஏ |
| 202927 பி | 202927 சி |
| 202935 ஏ | 202935 பி |
| 202935 சி | 202935 டி |
| 202935 ஈ | 202936 ஏ |
| 202936 பி | 202937 ஏ |
| 202941 ஏ | 2 2944 ஏ |
| 202944 பி | 202944 சி |
| 202975 ஏ | 202986 ஏ |
| 203005 ஏ | 203025 ஏ |
| 203025 பி | 203 28 ஏ |
| 203036 ஏ | 203036 பி |
| 203036 சி | 203038 ஏ |
| 203060 ஏ | 203123 ஏ |
| 203867 ஏ | 203867 பி |
| 203867 சி | |

### பருத்தித்துறை

| | |
|---|---|
| 196418 ஏ | 196644 ஏ |
| 196784 ஏ | 196861 சி |
| 198217 ஏ | 198217 பி |
| 198283 ஏ | 198308 ஏ |
| 198308 பி | 198477 ஏ |
| 198505 ஏ | 198517 ஏ |
| 198517 பி | 198517 சி |
| 198517 டி | 200816 ஏ |
| 200897 ஏ | 200897 பி |
| 200932 ஏ | 200932 பி |
| 201025 ஏ | 201147 ஏ |
| 201147 பி | 202751 ஏ |
| 202751 பி | 202751 சி |
| 202753 ஏ | 202755 ஏ |
| 202755 பி | 202758 ஏ |
| 202758 பி | 202792 ஏ |
| 202792 பி | 202792 சி |
| 202795 ஏ | 202808 ஏ |
| 202808 பி | 202808 சி |
| 202808 டி | 202808 ஈ |
| 202808 எப் | 202828 ஏ |
| 202828 பி | 202829 ஏ |
| 202829 பி | 202829 சி |
| 202831 ஏ | 202831 பி |
| 202831 சி | 202831 டி |
| 202833 ஏ | 202837 ஏ |
| 202837 பி | 202837 சி |
| 202840 ஏ | 202840 பி |
| 202844 ஏ | 202857 ஏ |
| 202857 பி | 20 862 ஏ |
| 202863 ஏ | 202886 ஏ |
| 202905 ஏ | 202918 ஏ |
| 202931 ஏ | 202932 ஏ |
| 202932 பி | 2 1932 சி |
| 202950 ஏ | 202950 பி |
| 202951 சி | 202951 ஏ |
| 202967 ஏ | 202967 பி |
| 202984 ஏ | 202985 ஏ |
| 202991 ஏ | 203014 ஏ |
| 203014 பி | 303015 ஏ |
| 203021 ஏ | 203021 பி |
| 203048 ஏ | 203049 ஏ |
| 203049 பி | 203049 சி |
| 203053 ஏ | 203054 ஏ |
| 203054 பி | 203116 ஏ |
| 203148 ஏ | 203229 ஏ |
| 204036 ஏ | 204036 பி |

## இராசி பலன்

1/8/2001
(ஆடி 16, புதன்)
துவாதசி காலை 7.29 வரை
மூலம் பி.ப 4.19 வரை
ராகுகாலம் 12.03 - 1.33
நல்லநேரம் 4.33 - 6.03
பிரதோஷ விரதம்

**மேடம்**
வயிற்றுக் கோளாறு, அச்சமான நிலை, கட்டுப்பாடு, பிரயாணம்.

**இடபம்**
வீண் மனஸ்தாபம், வியாதி, காரிய தடங்கல், பிரயாண பயம்.

**மிதுனம்**
சுவாரஸ்யம், நினைத்த காரியம் கைகூடும், களஸ்திர சுகம், மதிக்கப்படுதல்.

**கடகம்**
மனமகிழ்ச்சி, உடல் நலம், காரிய அனுகூலம், முயற்சி விருத்தி.

**சிங்கம்**
புத்திரரால் மனக்கவலை, முயற்சி தாமதம், நித்திரைக் குறைவு, போசன சுகம்.

**கன்னி**
மனச்சஞ்சலம், திடீர் நன்மை, மனச்சோர்வு, காரிய தாமதம்.

**துலாம்**
அந்நியர் சந்திப்பு, பிரயாணம், சகோதரர் உதவி, காரிய அனுகூலம்.

**விருச்சிகம்**
வாக்கு சலகம், பொருள் விரயம், நிலை மாற்றம், முயற்சி தாமதம்.

**தனுசு**
செல்வாக்கு, முயற்சி ஜெயம், போசன சுகம், சயன சுகம்.

**மகரம்**
அமைதிக் குறைவு, பிரயாணம், முயற்சி தாமதம், திடீர் நன்மை.

**கும்பம்**
காரிய நன்மை, பெருமையடைதல், குடும்பசுகம், தன வரவு.

**மீனம்**
அதிகாரம், பிறர் உதவி, சுப நிகழ்வு, கடின உழைப்பு.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டுள்ளது)

-வளவன்-

## அமரதேவவிற்கு சர்வதேச விருது

[கொழும்பு]

சங்கீத வித்வானும் முன்னாள் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் வாத்தியக் குழு தலைவருமான கலாநிதி டபிள்யு டி அமர தேவவிற்கு ரேமன் மாக்சாசே என்ற சர்வதேச விருது கிடைத்துள்ளது.

இதற்கான அறிவிப்பை பிலிப்பைன்ஸ் மெக்சாசே மன்றம் அறிவித்துள்ளது. [ந-4]

## புனரமைப்பு பணிகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யு என் எச் சி ஆர் இனது நிதி திட்டத்தின் கீழ் சாந்தி உளவளத் துணைநிலைய விரிவுரை மண்டபப் புனரமைப்புப் பணிகள் ஆரம்பமாகியுள்ளன.

மேற்படி புனரமைப்புப் பணிகள் யாழ் பிரதேசசெயலகத்தின் மேற்பார்வையின் கீழ் இடம் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. [செ-9]

## முக்கிய அறிவித்தல்

### சகல லங்கா சிமெந்து நிறுவன ஊழியர்களுக்கும்

தொழிற் சங்கம், நிர்வாகத்திடம் சில முக்கிய கோரிக்கைகளை முன்வைத்துள்ளது. எனவே சகல தொழிலாளர்களும் தொழிற் சங்கம் அறிவிக்கும் வரை நிர்வாகத்தால் வழங்கப்பட்ட சுய விருப்பு ஓய்வு பெறும் படிவத்தை நிரப்பி ஒப்படைக்க வேண்டாம் என தொழிற் சங்கம் தொழிலாளர்களிடம் மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறது.

செயலாளர்
கைத்தொழில் பொதுத் தொழிலாளர் சங்கம்
லங்கா சிமெந்து நிறுவனக் கிளை,
காங்கேசன்துறை.

(C/2347)

யா-கந்தரோடை
தமிழ்க் கந்தையா வித்தியாசாலை

## பரிசளிப்பு விழாவும் நிறுவுநர் தினமும்-2001

இடம்: வித்தியாசாலை திறந்த வெளி அரங்கு
காலம்: 03-08-2001 வெள்ளிக்கிழமை பி.ப.1.30மணி
தலைவர்: திரு. க. செல்வக்குமாரன், அதிபர்

பிரதம விருந்தினர்
திரு. செ. மகாலிங்கம்
திட்டப் பணிப்பாளர்
மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலகம்,
யாழ்ப்பாணம்.

நிறுவுநர்தின - நினைவுப்பேருரை
கலாநிதி ப. புஷ்பரத்தினம் அவர்கள்
முதுநிலை விரிவுரையாளர்,
வரலாற்றுத்துறை, யாழ். பல்கலைக்கழகம்

நினைவுப் பேருரையில்
'தொல்லியல் நோக்கில் கந்தரோடையும் கதிரமலையும்'
என்ற விடயம் இடம்பெறுகிறது.

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

கந்தரோடை,
சுன்னாகம்.

அதிபர்,
ஆசிரியர், மாணவர்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்.

(3414)

நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு
எமது வாடிக்கையாளர்கள் நலன் கருதி
இன்று (01.08.2001)
எமது கிளையை நல்லூரில் ஆரம்பித்து வைக்கிறோம்.
முற்றும் சுகாதாரம் பேணி அதி சுவையூட்டிய
ஐஸ்கிறீம் வகைகளை குடும்பமாக
சுவைத்து மகிழ்ந்திட

கல்யாணி கிறீம் ஹவுஸ்

(நல்லூர் முருகன் ஆலயத்திற்கு வடக்குப்பக்கம்)
40,5 கோவில் வீதி, நல்லூர்
யாழ்ப்பாணம்.

(C.2346)

# உளவியல் ரீதியாகப் பாதிப்புற்ற மக்களுக்குச் சிகிச்சையளிப்பதற்கு யாழில் வைத்தியர்கள் பற்றாக்குறை

## தற்போது ஒருவர் மாத்திரமே பணியில்

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் குறிப்பாக வடக்கு - கிழக்கு மாகாணங்களில் நடைபெற்று வரும் உள் நாட்டு யுத்தம் காரணமாக இங்குள்ள மக்கள் பொருளாதார ரீதியாக மட்டுமின்றி உளவியல் ரீதியாகவும் பாதிப்படைந்தவர்களாகவே காணப்படுகின்றார்கள்:

பெரும்பாலானோர்இவ்வாறு உளவியல் ரீதியாகப் பாதிப்படைந்துள்ளதால் அவர்களுக்கு உளவியல் சிகிச்சை அவசியம்.

இவ்வாறு யுனிசெவ் அமைப்பின் ஆதரவுடன் ஆரம்பிக்கப்பட்ட உளவியல் பயற்சியாளர்களுக்கான பயிற்சி வகுப்பின் தொடக்க வைபவம் கடந்த திங்களன்று நடைபெற்றபோது அதில் கலந்து கொண்டு உரையாற்றிய பேராசிரியர் தயா சோமசுந்தரம் தெரிவித்தார்.

திட்டப் பணிப்பாளர் டாக்டர் என். சிவராஜா தலைமையில் இடம்பெற்ற மேற்படி விழாவில் வணபிதா டேமியன் உரையாற்றுகையில்; இங்கே நிகழ்ந்துகொண்டிருக்கும் யுத்தத்தின காரணமாக நாம் சாதாரணமான வாழ்வை அசாதாரணமாக வாழ்ந்து வருகிறோம்.

எமது சமூகத்தில் உளவளம் பற்றிய அறிவு போதாது இருப்பதுடன், இதுதொடர்பாக பயிற்சி அளிப்பவர்களும் மிகச்சொற்பமாகவே காணப்படுகின்றனர்.

யாழ். குடாநாட்டில் உள்ள 4 இலட்சம் மக்களுக்கும் உளச் சிகிச்சை அளிப்பதற்கு ஒரே ஒரு வைத்தியர் மட்டும் உள்ளமையை இங்கு சுட்டிக்காட்ட முடியும்.

எனவே சமூகமட்டத்தில் உள ஆரோக்கியம் தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்துதல் தற்போதுள்ள முக்கிய தேவையாகும் எனக் கூறினார்.

சாந்திகத்தில் நடைபெற்ற இவ் விழாவில் யுனிசெவ் அமைப்பைச் சேர்ந்த ஐரின், ஜேப்ஸ்தொப்ஸன், வைத்திய கலாநிதி சிவராஜா, யாழ் பிரதேச செயலர் செந்தில்நந்தனன், திட்ட இணைப்பாளர் இரா. சந்திரசேகர சர்மா ஆகியோர் கலந்து கொண்டனர் (உ-9)

## தேர்த்திருவிழா

(அரியாலை)

வட்டுக்கோட்டை கிழக்கு திரட்டிப்பளை அம்மன் ஆலய தேர்த்திருவிழா இன்றும் தீர்த்தத் திருவிழா நாளையும் நடைபெறவுள்ளன. (செ-106)

★ ★ ★

(ஊர்காவற்றுறை)

அனலைதீவு நயினாக்குளம் பூரணாம்பிகாபுட்கலாம்பிகா சமேதஸ்ரீஹரிகர சுத ஐயப்ப சுவாமிஆலய தேர்த் திருவிழா எதிர்வரும் வெள்ளிக்கிழமையும் தீர்த்தத்திருவிழா சனிக்கிழமையும் நடைபெறவுள்ளன. (செ-75)

★ ★ ★

(அரியாலை)

உடுவில் கிழக்கு கற்பகப் பிள்ளையார் ஆலயத் தேர்த் திருவிழா நாளை வியாழக்கிழமையும் தீர்த்தத்திரு விழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமையும் நடைபெறவுள்ளன சனிக்கிழமை மாலை 4 30 மணிக்கு திருக்கல்யாணம் இடம்பெறவுள்ளது. (செ-106)

★ ★ ★

(அரியாலை)

வேலணை பெருங்குளம் முத்துமாரி அம்மன் ஆலயத் தேர்த்திருவிழா நாளை வியாழக் கிழமையும் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறவுள்ளன. (செ-106)

# 9 வடபகுதி இளைஞர்கள் சி. ஐ. டி. விசாரணையில்

(கொழும்பு)

கட்டுநாயக்க விமானப் படைத்தளத்தின் மீது தாக்குதல் நடத்தியவர்களில எஞ்சியவர்கள் என்று சந்தேகிக்கப்படும் ஒன்பது வடபகுதி இளைஞர்கள் வென்னப்புவவிலுள்ள உல்லாசப் பயணிகள் விடுதியொன்றில் வைத்து பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்;

அவர்கள் வசம் தேசிய அடையாள அட்டைகளோ அல்லது வேறு ஏதேனும் ஆவணங்களோ இருக்கவில்லை எனவும் முல்லைத்தீவு, கோப்பாய், வாழைச்சேனையைச் சேர்ந்த இவர்கள் இத்தாலிக்கு அழைத்துச் செல்லப்படுவதற்காக வர்த்தகரொருவரால் அங்கு தங்க வைக்கப்பட்டவர்கள் என்றும் தெரியவந்துள்ளது.

இவ்விபரங்களைத் தெரிவித்த இன்ஸ்பெக்டர் அனுரா அபயவிக்கிரம அவர்களை விசாரணைக்காக சி.ஐ.டி பிரிவிடம் கையளிக்கவிருப்பதாகத் தெரிவித்தார். (உ)

# அஞ்சல் வாக்களிப்பு அத்தாட்சி அலுவலர்களுக்கான அறிவுறுத்தல் வகுப்பு வெள்ளி

[யாழ்ப்பாணம்]

இந்த மாதம் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள சர்வஜன வாக்கெடுப்பில்கடமையாற்றவுள்ள அஞ்சல் வாக்களிப்பை அத்தாடசிப் படுத்தும் அலுவலர்களுக்கான அறிவுறுத்தல் வகுப்பு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முப10 00 மணிக்கு யாழ் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுளளதாக உதவித் தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

மேற்படி அலுவலர்களுக்கு இது தொடர்பான அறிவுறுத்தல் அனுப்பப்பட்டு விட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்: (செ-9)

# பத்திரிகையாளர்பயிற்சிநெறி பூர்த்தி செய்தவர்களுக்கு சான்றிதழ் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண ஊடகவியலாளர் சங்கத்தால் நடத்தப்பட்ட பத்திரிகையாளர் பயிற்சி நெறியினைப் பூர்த்தி செய்தோருக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நாளை வியாழக்கிழமை பி.ப. 2 00 மணிக்கு யாழ்ப்பாண ஊடகவியலாளர் சங்கத் தலைவரும், ஐ.பி.சி வானொலியின் யாழ் நிருபருமான வே தவச்செல்வன் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந் நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ். பல்கலைக்கழக உயர்பட்டப் படிப்புகள பீட பீடாதிபதி பேராசிரியர் அ. சண்முகதாஸ் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக வைத்திய கலாநிதி வை.தியாகராசா, கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் க கேதீஸ்வரன், நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி அதிபர் சோ. விஸ்வலிங்கம், கவிஞர் இ முருகையன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இரண்டாம் நிகழ்வாக சமய, சமூக செய்திகளை வெளியிட்டமைக்கான விருது பாதுகாவலன் பத்திரிகைக்கு வழங்கலும்,

தினக்குரல் யாழ். நிருபர் ஐயா சச்சிதானந்தத்திற்கு மூத்த பத்திரிகையாளர் விருது வழங்கலும் இடம் பெறவுள்ளன.

இந் நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ். பல்கலைக் கழகபுவியியல துறைத் தலைவர் பேராசிரியர் இரா. சிவச்சந்திரனும சிறப்பு விருந்தினர்களாக யாழ் மாவட்ட நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் சி. வி. கே. சிவஞானம், மகளிர் அபிவிருத்தி நிலையத் தலைவர் திருமதி சறோஜா சிவச்சந்திரன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (உ)

## நல்லூரில் இன்று

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் ஆலய உற்சவத்தையொட்டி இளம் கலைஞர் மன்றத்தினரால் தினமும மாலை 6.00 மணி தொடக்கம் 7.15 மணி வரை நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் நடத்தப்படும் தெய்வீகஇசையரங்கில் இன்று திருமதி மகேஸ்வரி சுப்பிரமணியத்தின் பாட்டுக் கச்சேரி இடம் பெறவுள்ளது. (செ)

## இன்று பரிசளிப்பு விழா

(புலோலி)

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள உயர்தரப்பாடசாலையின் பரிசளிப்புவிழா இன்று அதிபர்திருமதி செலவமலர் சுந்தரேசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதமவிருந்தினராக ஜப்பான் ரோக்கியோ பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி திருமதி. மனோன்மணி சண்முகதாஸ் கலந்து கொள்ளவுள்ளார்.

★ ★ ★

பருத்தித்துறை வட - இந்து மகளிர் கல்லூரியின்பரிசளிப்பு விழா இன்று பி. ப. 2 00 மணிக்கு அதிபர் செல்வி அன்னபாக்கியம் கனகரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது

நிகழ்வில் சாவகச்சேரி மாவட்ட நீதிபதி அன்னலிங்கம் பிரேம் சங்கர் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (உ-58)

## நல்லூரான் திருவடிக்கு-8



### பரிந்துவிடை தாருமய்யா

நல்வளம் கொழிக்கும் நல்லையூரின் நாயகனே
நானிலம் சிறக்க நல்லாட்சி புரிபவனே
தேனினும் இனியவனே தேன் தமிழின் நாயகனே
தேடிவரும் அன்பரை நாடிநிதம் காப்பவனே!

அன்பனுக்கு அன்பனாய் அருள்சொரியும் அண்ணலே
அல்லல்கள் போக்கி அன்பு வழிகாட்டிடுவீர்
பாட்டிசைக்கும் அன்பர்குழாம் போற்றிவர
பணிவுடன் ஏத்துகிறோம் பரிந்துவிடைதாருமய்யா!

நீர்வையூர் வெ. சுதர்சினி

### நல்ல வரம் தந்திருவாய்

நல்லூரின் வேலவனே நல்லவரம் தந்திடுவாய்
ஆறுமுக வேலவனே ஆறுதல் தந்திடுவாய்
பன்னிருகை வேலவனே பாலகனைக் காத்திடுவாய்
மயில்மீது அமர்ந்தவனே மனக்குறையை
- போக்கிடுவாய்
விநாயகனோடு உடன்பிறந்தவனே வினையெல்லாம்
- தீர்த்திடுவாய்
நாடிவரும் பக்தருக்கு நல்லருள் தந்திடுவாய்
திக்கெல்லாம் போற்றும் திருமுருகாஉன் திருவருளை
- தந்திடுவாய்

நல்லூர் - கிருபா

### உணர்த்துவாய் உள்

ஆர்க்கும் மணிஓசை அதிர்வு தினம்தினமும்
கூர்பாய் மனத்தைக் குவியவைக்கும்-சேர்க்கும்
திருவும் அறிவின் சிறப்பும்பொலிய
உருவாய் உணர்த்துவாய் உள்

நயினைச் சோதி

### பாவ வலையை நீக்காயோ.

மறையென் றறிந்து மௌனத் திருந்துன்
மலர்த்திரு வடியை மனத்தகத் திருத்தி
கறையொன் றிலா வெள்ளைக் கமல
மெனத்தாய் மைசெய்தே வாழாறிமாந்தர்
பறையும் மொழிகள் பாவ வலையாய்
பற்றியெம் மைப்பிடிக் கும்நிலை யுன்தன்
நிறைந்த குணத்தால் நீககு கந்தா
நன்மையும் மேன்மையும் நாடிச் சிறக்கவே

நா.நவராஜ்

### விடிவு தருவாய் வள்ளலே!

ஒருவழியும் தெரியாது ஒருநிலையும் புரியாது
ஆற்றாது அல்லலினால் அவலமுறும் அடியேற்குத்
திருமுருகா! துணையாகி ஒளிகாட்ட மாட்டாயோ?
தேவர்க்கு அபயமெனத் தோன்றியருள் செய்தவனே!
திருநல்லைப் பதியமர்ந்த தங்க வேலவனே!
தீராத வினையெல்லாம் தீர்த்தருளும் சரவணனே!
வருவாயே! இங்கெமக்கு விடிவதனைத் தருவாயே!
வள்ளலே! உன்பதமே வணங்குகிறோம் அப்பனே!

நாயன்மார்கட்டு ப.மகேந்திரதாசன்

### வேதனை அழித்திடும் முருகா

பழமதைப் பெறவேண்டி பாரலைந்த முருகா
பழந்தமிழ் கிழவியுடன் பழகிய அழகா
பாரெல்லாம் போற்றும் பழனி முருகா
பைந்தமிழர் வேதனையை அழித்திடும் முருகா

பழனிக்கு பேர்பெற்ற பழனி ஆண்டவா
பண்டார வடிவில் ஆட்கொள்ளும் முருகா
கொண்டாடும பக்தர்களின் நெஞ்சகலா முருகா
வண்டார் குழல் மாதருடன் வரும் முருகா

வேலணை பாலா

### கலிகாலம் சுகமடையவை

"வெள்ளிடத்தில் கருமணியாம் நல்லூர் பதிதனிலே
கலாநிதியாய் காட்சி தரும் வித்தகனே
மாநெடு பக்தர்கள் கூடும் நின்பதியில்
வீற்றிருக்கும் கரிமுகனுக்கு இளையவனே
கலங்கரை விளக்காய் சுடரொளி வீசுபவனே
கருடப் பார்வையினால் கொடும் பகை வென்றவனே
கலிகாலம் தீங்கற்று நீங்கி நல்லியல் காலச்
சக்கரம் நன்றே சுழன்றிட அருள் புரிவாயே"

கு.ச துலவிகன்

# தரம் 5 புலமைப் பரிசில் பயிற்சி வினாத் தாள்

## வினா இல-28 ஆக்கம்: செல்வி

★ பின்வரும் சொற்களுக்குரிய ஒத்த கருத்துச் சொல்லை அடைப்புக் குறிக்குள் இருந்து தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக.

01) மஞ்ஞை- (கோழி, மயில், குயில், மைனா)
02) அரவம்- (முயல், பாம்பு, கீரி, ஓணான்)
03) வாரணம்- (சிங்கம், புலி, யானை, யாழி)
04) கோகுலம்- (புறா, கிளி, குயில், மயில்)
05) நாகணவாய்- (பூனை, நாய், மைனா, வான்கோழி)

★ பின்வரும் பழமொழிகளைப் பூரணப்படுத்துக.

06) அரசன் எவ்வழி — — —
07) ஆற்றிலே போட்டாலும் — — —
08) சுட்டி எட்டிய வரை பாயும் பணம் — — —
09) அன்பான சிநேகிதனை — — —
10) பசித்தாலும் புலி — — —

★ பின்வரும் வசனங்களில் உள்ள பிழையான சொல்லை திருத்தி அமைத்து, அவ்வசனத்தை மீண்டும் எழுதுக.

11) ஆற்றிலே வெள்ளம் கரைபுரண்டு ஓடியது.
12) கணவனை இழந்த கமலா கண்ணீரும் கம்பளையுமாக வாழ்க்கை நடத்தினாள்.
13) வேகமாக ஓடிவந்த காளை மாடு சிறுவனை தூக்கி வீசியது.
14) அண்மையில் யாழ். குடா நாட்டில் அடமழை பெய்தது
15) கொலைக் குற்றவாழிக்கு நீதிபதி மரண தண்டனை வழங்கினார்.

★ பின்வருவனவற்றில் 'அ' பிரிவிலுள்ள மூன்று சொற்கள் ஏதோ ஒருவகையில் ஒற்றுமையுடையன. 'ஆ' பிரிவிலுள்ள மூன்று சொற்களில் ஒன்று 'அ' பிரிவிலுள்ள சொற்களுடன் தொடர்புடையது. அச் சொல்லின் கீழ்க் கீறிடுக.

| | அ | ஆ |
|---|---|---|
| 16) | பாடுதல், ஆடுதல், ஓடுதல் | வாடுதல, பாய்தல், வதங்கல் |
| 17) | நண்டு, சுணவாய், திருக்கை | வாழை, மீன், கறி |
| 18) | மயில், குயில், கோழி | கொக்கு, நாய், பூனை |
| 19) | நட்சத்திரம், நிலவு, உடுக்கள் | நீலம், சூரியன், ஒலி |
| 20) | பாரதி, இளங்கோ, கம்பன் | புத்தர், வள்ளுவர், இயேசு |

★ பின்வரும் வினாக்களுக்குரிய விடையைத் தருக.

21) புனுகு என்னும் வாசனைத் திரவியம் எந்த விலங்கிலிருந்து பெறப்படுகின்றது?
22) '' ஆடிப்பிறப்பிற்கு நாளை விடுதலை — — —'' என்ற பாட்டைப் பாடியவர் யார்?
23) கன்னியா வெந்நீர் ஊற்றுக்கள் எங்கே அமைந்துள்ளன?
24) கடலும் கடல் சார்ந்த இடமும் எவ்வாறு அழைக்கப்படும்?
25) அண்மையில் தாக்குதலுக்குள்ளான விமான நிலையத்தின் பெயர் என்ன?

★ பின்வரும் பந்தியை வாசித்து அதன் கீழ் வரும் வினாக்களுக்கு விடை தருக.

'ஆபிரிக்காவின் தென்பகுதியில் வசிக்கும் 'சுலு' என்னும் சாதியினர் தமக்கு வரும் நோய்களுக்கு எல்லாம் தீய மந்திர சக்தியே காரணமென நம்புகின்றனர். எனவே தமக்கு வரும் நோய்களைக் குணப்படுத்த மந்திர வாதிகளையே நாடுகின்றனர். கிராமங்களில் வாழும் மக்கள் வியாதிகளின் மூல காரணத்தைப் பற்றி நம்மிடம் கூறும் போது அவர்கள் கூறும் காரணங்கள் நமக்கு வேடிக்கையாக இருக்கின்றன.

26) இப் பந்தியில் கூறப்பட்டிருக்கும் முக்கிய விடயம் யாது?
27) 'சுலு' என்னும் சொல் எதனைக் குறிக்கின்றது?
28) 'வேடிக்கை' என்றால் என்ன?
29) இம் மக்கள் நோய்களைக் குணப்படுத்துவதற்கு யாரை நாடுகின்றனர்?
30) இப்பந்தியில் விபரிக்கப்படும் மக்கள் எங்கு வசிக்கின்றார்கள்?

★ பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழை எனவும் குறிப்பிடுக.

31) யாழ். குடா நாடு நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்ட ஒரு நிலப்பரப்பாகும்.
32) கடல் நீர் குடிப்பதற்கு உதவும்.
33) தமிழ்ப் பெண்கள் எப்பொழுதும் சேலை அணிவர்.
34) ஐந்தாம் தரத்தில் கற்கும் மாணவர்கள் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றுவார்கள்.
35) வலம்புரிச் சங்கு கிடைப்பது கடினம்.

★ பின்வரும் வினாக்களுக்குரிய விடையினைத் தருக.

36) ஒரு தோட்டத்தில் ஐம்பது மரங்கள் நிற்கின்றன. அவைகளுள் அரைவாசி தென்னை மரங்கள். மிகுதியில் 4/5 பங்கு மாமரங்கள். மிகுதி பலாமரங்கள் ஆயின் பலா மரங்களின் எண்ணிக்கை யாது?
37) வியாபாரி ஒருவன் குறிப்பிட்டளவு தோடம் பழங்களையும் அதிலும் மூன்று மடங்கு மாம்பழங்களையும் மாம்பழங்களிலும் இரு மடங்கு கொய்யாப்பழங்களையும் விற்றான். அவன் விற்ற பழங்கள் எல்லாவற்றினதும் எண்ணிக்கை நூறு ஆயின் அவன் விற்ற கொய்யாப் பழங்கள் எத்தனை?
38) சிவதா லதாவைக் காட்டிலும் ஐந்து மடங்கு பணம் வைத்திருக்கின்றாள். சிவதா லதாவிற்கு 750ரூபா கொடுத்தால் இருவரிடமும் உள்ள பணம் சமமாகும். ஆயின் லதா ஆரம்பத்தில் வைத்திருந்த பணம் எவ்வளவு?
39) விஜயாவும் சந்திரியும் பாடுவார்கள். பானுவும் சுசந்திரியும் ஆடுவார்கள். பானுவும் விஜயாவும் சித்திரம் வரைவார்கள். இவர்களில் இரண்டு கலைகளுந் தெரிந்தவர் யார்?
40) விமானம் ஒன்று நாயும் குரங்கும் ஓட்டப் பந்தயத்தில் இறங்கினார்கள். குறிப்பிட்டளவு தூரம் ஓடி முடித்ததும் விமானத்தை தெரு நாய்கள் துரத்த தொடங்கின. இப் பந்தயத்தில் வென்றவர் யார்?

புலமைப் பரிசில் பரீட்சை

## வினா இல-27 விடைகள்

1) இராவணன்
2) பாலைவனம்
3) 'அரக்கர் வம்சம்'
4) பிழை
5) பிழை
6) பிழை
7) சரி
8) சரி
9) பஸ்நிலையம்
10) கார்
11) நத்தை
12) பலூன்
13) இறப்பது
14) வயது
15) நிந்தனை செய்யக்
16) உண்மைபேச
17) மதித்தல்
18) மட்டக்களப்பு
19) அ) திருக்கோணேஸ்வரம்
ஆ) திருக்கேதீஸ்வரம்
20) நெடுந்தீவு
21) 1505 இல் போர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்ததிலிருந்து
22) அனுரா பண்டார நாயக்க
23) முல்லைத்தீவு
24) இரசாயனத் தொழிற்சாலை
25) கி பி 8.ஆம் நூற்றாண்டில்
26) கானகம்
27) காகம்
28) கானம்
29) கீதம்
30) கத்தி
31) இறப்புஎன்பது நிச்சயிக்கப்பட்ட ஒன்று
32) சிறுவயதில் பழகியபழக்கமே என்றும் நிலைத்திருக்கும்
33) தகுதியற்றவனுக்கு பெரிய பதவிவரும் போது தலைகால் புரியாமல் நடப்பது
34) முற்பிறவியில் செய்த வினைகளை இப்பிறவியில் அனுபவித்தல்
35) ஒருவர் செய்த தீயசெயலுக்குரிய பலனை அவர் அனுபவித்தே தீருவார்
36) 175 ரூபா
37) ஐந்து 50 சத நாணயங்கள்
38) பத்து 25 சத நாணயங்கள்
39) இருபது நீல முத்துக்கள்
40) இருபது வெள்ளை முத்துக்கள்

# புலமைப்பரிசில் பரீட்சை வினா இல - 27

### அதி கூடிய புள்ளிகளைப் பெற்றவர்களின் பெயர் விபரம்

01) ஆ திவ்வியா, கோப்பாய் நாவலர் வித்தியாலயம்
02) அ வஜீரன், யாழ் பரியோவான் கல்லூரி
03) தி தனம்ஜெயன், கோப்பாய் நாவலர் வித்தியாலயம்
04) ம. தினேஸ், வல்வை. ம . ம வித்தியாலயம்
05) பி பிரதீபா, வல்வை. சிவகுரு வித்தியாலயம்
06) சி நிரேஜினி, வல்வை. ம . ம . வித்தியாலயம்
07) வே. விஜிதுமார், வல்வை ம ம. வித்தியாலயம்
08) அ. டயனா, மீசாலை விக்கினேஸ்வரா வித்தியாலயம்
09) சி. லகீசன், மானிப்பாய் சென்ற் ஆன்ஸ்
10) ச பிரவீணா, கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்
11) யோ. வர்சிகா, கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம்
12) சு. கோகுலன், புற்றளை மகாவித்தியாலயம்
13) க. கஜந்தன், மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை
14) பு கயனா, வல்வை அ . மி த . க பாடசாலை
15) நா. அனோஜினி யாழ். இந்து ஆரம்ப பாடசாலை
16) ர சயந்தன் வல்வை சிவகுரு வித்தியாசாலை
17) செ தக்ஷாயினி பெரியபுலம் மகாவித்தியாலயம்
18) வா. ஹபஸவாசினி, வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி
19) ம. ஷலினி, வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி
20) ப. சாமரா, யாழ். இந்து ஆரம்பபாடசாலை
21) ச. நிவேதிகா, கோப்பாய் நாவலர் வித்தியாலயம்
22) அ யூட்சன், யாழ் மத்தியகல்லூரி
23) பு பிரசாந்தன், காரைநகர் தியாகராசா மகாவித்தியாலயம்
24) ம. விஜி, பிளவத்தை அ.மி.த.க பாடசாலை
25) ப. ஜெயந்துசா இந்து. மகளிர் ஆரம்பபாடசாலை
26) வி ஜெயதீபா, நயினாதீவுநாகபூஷணி வித்தியாலயம்
27) க சஸ்ரோ, யாழ் மத்தியகல்லூரி
28) ஸ் ஸ்டானிஸ்ராஜ். யாழ். மத்தியகல்லூரி
29) உ.விஜீத், யாழ் மத்திய கல்லூரி
30) பா. சாஜிஷங்கர், வட்டு யாழ்ப்பாணக் கல்லூரி
31) கு கேதவன், யாழ். மத்திய கல்லூரி
32) ஏ தனுஷன், யாழ்.மத்தியகல்லூரி
33) ஜெ ஜெநில்ரன், யாழ். மத்தியகல்லூரி
34) க நிரோஜினி, யாழ் புனித மரியாள்வித்தியாலயம்
35) வி. கோகுலன், சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாலயம்
36) அ லூயசோதை, தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்
37 சி. டிலீப், யாழ். மத்தியகல்லூரி
38) த. காட்சாயினி, கலட்டி மெ மி த க.பாடசாலை
39) சி. திருபா, மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி
40) மு. விஜிகுகன், அம்பன் அ மி க பாடசாலை
41) சி பிரசீத், சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம்
42) து ரயூவன், அளவெட்டி றோ.க.த. பாடசாலை
43) ச. சாருஜா, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
44) சு விவேக், வல்வை சிவகுருவித்தியாசாலை
45) வி மேகலா, தாவடி இ த க.பாடசாலை
46) பா. கிருஷ்ணபவான், கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம்

## நல்லூர் பிரதேச சபை விளையாட்டுப் போட்டிகள் ஞாயிறன்று சைக்கிள் ஓட்டம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபையினரால் நடத்தப்படும் விளையாட்டுப் போட்டிகளில் சடந்த ஞாயிறன்று மரதன் ஓட்டப்போட்டி இடம்பெற்றது. இதனை நல்லூர் பிரதேசசபைச் செயலாளர் செ. செல்வரட்ணம் ஆரம்பித்து வைத்தார்.

இவ் விளையாட்டுப் போட்டித் தொடரில் சைக்கிள் ஓட்டப்போட்டி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை 5 ஆம் திகதி அன்று நடைபெறவுள்ளது.

இப் போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட வீரர்கள் வியாழக்கிழமைக்கு முன் பிரதேச சபை அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு, பெயர்களைப் பதிவு செய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பு:-
விடைகளை வேறுதாளில் எழுதி அனுப்பவும் இதற்கான விடைகளை 06 08-2001 இற்கு முன் எமக்குக் கிடைக்கத்தக்கதாக அனுப்பி வைக்கவும்.

## கல்விப் பகுதி
### வினா இல - 28
"வலம்புரி"
இல: 15, வெள்ளாந்தெரு.
யாழ்ப்பாணம்.

மாணவர் முழுப்பெயர்: ..........................
சொந்த முகவரி: ..........................
கற்கும் பாடசாலை: ..........................
மாணவர் கையொப்பம்: ..........................

இப்படிவத்தை வெட்டி உங்கள் விடைத்தாளுடன் தவறாது இணைத்து அனுப்பிவைக்கவும்.

## துணைவேந்தர் நல நிதிய கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக மாணவர்களுக்கான துணைவேந்தர் நலநிதியக் கொடுப்பனவு முதலாம் தவணைப் பணம் நாளை வியாழக்கிழமை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையில் வைத்து வழங்கப்படவுள்ளது.

அங்கீகரிக்கப்பட்ட மாணவர்களை தவறாது கொடுப்பனவை அன்றைய தினத்தில் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## யாழ் சேவை நேரம் நீடிப்பு

இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபன யாழ் சேவை ஒலிபரப்பு நேரம் இன்று முதல் நீடிக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில், பகல் நிகழ்ச்சிகள் பி. ப 1. 30 மணி தொடக்கம் 5. 00 மணி வரையும்,

இரவு நிகழ்ச்சிகள் 8 00 மணி முதல் நள்ளிரவு 12 00 மணி வரையும் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. [உ]

## இன்று ஒரு தகவல்

### மனமாற்றம் எதனால்?

மனித மனம் நிலையில்லாதது. அடிக்கடி மாறும், மாற்றும் இயல்புடையது. இங்கு எண்ண அலைகள் எப்போதும் மோதிக் கொண்டேயிருக்கும். இதை நிறுத்தி மனதை ஒரு நிலைப் படுத்தும் போதே நிலையான கட்டுக் கோப்பான ஒரு வாழ்க்கையை அமைக்க முடியும். அல்லாவிடில் அந்தரத்தில் தொங்கிக் கொண்டிருக்கும் நிலையில்லாத வாழ்க்கையே அமையும் என்பது யதார்த்தத்தின் வெளிப்பாடு. மாறும் நெஞ்சத்தின் வெளிப்பாட்டை மனிதனது செயற்பாடு உணர்த்தும். அகத்தின் அழகு முகம் இனங்காட்டும். இம் மாற்றத்தில் எத்தனையோ பண்புகள் புதைந்து கிடக்கும். இதை இனங்காணாதில் மனிதம் துடியாய்த் துடிக்கும்.

இச் செயற்பாடானது மகிழ்வான தனி மனித, குடும்ப சமுதாய ஒட்டுறவில் தாக்கத்தைப் பிறப்பிக்கும். இதினால் அறிவு அறியாமையையோ அன்றி அறியாமை அறிவையோ விரட்டும் இவ் விளைவு யாரேனும் ஒருவரில் தாக்கத்தைத் தரும் என்பதை விளக்க ஒரு கதை.

சுந்தரம் தன்னுடைய எசமானுக்கு விசுவாசமாகத் தனது கடமைகளைச் செய்து வந்தான்.

எசமானும், குடும்பத்தவரும் அவன் மீது அதீத பற்றுடையவராக இருந்தனர். பருவம் வரவே எசமான் அவனுக்குப் பொருத்தமான ஒரு பெண்ணைத் தேடித் திருமணம் செய்து வைத்ததுடன் தனது விவசாயக் காணியில் ஒரு துண்டையும் இவனுக்குச் சொந்தமாகக் கொடுத்தார். ஒரு நாள் இவன் தனது மனைவியுடன் அக் காணியில் வேலை செய்து கொண்டிருந்த போது அவனுக்குப் புதையல் ஒன்று கிடைத்தது. உடன் அதைத் தனது எசமானிடம் கொடுக்க சுந்தரம் விரும்பினான். மனைவி ராணியோ அதை முற்றாக மறுத்தாள். ஒரு மாதிரியாக கணவனையும் சம்மதிக்க வைத்து பாதையோரமாக இருந்த கல்லைப் புரட்டி அதன் கீழ் புதையலை வைத்து வீடு சென்றனர். அங்கு சென்ற சுந்தரம் மனைவியின் சொற்படி எசமானிடம் இனி மேல் தன்னை சுந்தர் என்று தான் அழைக்க வேண்டும். தனக்கு ஒதுக்கப்பட்ட வீட்டுக்கு அனைத்து வசதிகளும் செய்து தரவேண்டும் இனிமேல் தான் சட்டப்படி தான் வேலை செய்யப் போவதாகவும் அடம்பிடிக்க எசமான் அமைதியுடன் இதைக் கேட்டுக் கொண்டிருந்தார். விபரமறியாத ராணி புதையல் விடயம் பற்றித் தனது தமையனிடம் கூறவே அவன் புதைக்கப்பட்ட இடத்திலிருந்தும் புதையலை அகற்றி விட்டான். அன்று மாலை வேளை அவ்விடம் சென்ற போது கல் வேறோர் இடத்தில் இருந்தது திகைப்படைந்த சுந்தரம் தனதும் மனைவியினதும் அறியாமையை உணர்ந்து மீண்டும் எசமானிடம் வந்து சம்பவத்தைக் கூறி தன்னைப் பழையபடி சுந்தரம் என்றே அழையுங்கள், சாதாரண வீடு போதும் சட்டப்படி வேலை வேண்டாம் விசுவாசமான வேலையே வேண்டும் என்று கூற எசமான் பரிதாபப்பட்டார்.

எனவே எவ்விடயத்திலும் அறிவுக்கு வேலை கொடுத்து நேர்மையாகவும், விசுவாசமாகவும் பொறுமையாகவும் வாழ்வோம் ★

மு. விக்னேஸ்வரன்
கோப்பாய்

## களவாடப்பட்ட பொருட்கள் பாதுகாப்பு அரணில் தேக்கம்

[தென்மராட்சி]

தென்மராட்சியில் மீளக் குடியேற அனுமதிக்கப்பட்ட மட்டுவில், கைதடி நுணாவில், சரசாலை போன்ற இடங்களில் இருந்து பாதுகாப்புப் படையினரின் முன் அனுமதி பெறப்படாமல் கொண்டு வரப்பட்ட பொருட்கள் கைதடி கோப்பாய் வீதியிலுள்ள பாதுகாப்பு அரணில் தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

சைக்கிள், கதிரைகள், தையல் இயந்திரங்கள், எவர் சில்வர் பொருட்கள், மின் மானிகள், நீரிறைக்கும் குழாய், தாச்சிச்சட்டிகள் போன்றவை மேற்குறித்த இடத்தில் காணப்படுகின்றன.

இப்பொருட்கள் களவாக எடுத்து வரப்பட்டவை எனவும் கூறப்படுகின்றது.

இதேவேளை மட்டுவில், கைதடி நுணாவில் சரசாலைப் பகுதிக்குச் செல்லும் வேறு பிரதேசத்தவர்கள் திருட்டுத்தனமாக தேங்காய் கொப்பறா மற்றும் விறகுவகைகளை எடுத்து வருவதாகவும் தெரிய வருகிறது.

முக்கியமாக ஆட்களில்லாத வளவுகளில் காணப்படும் பெரிய மரங்கள் விறகுத் தேவைகளுக்காக திருட்டுக் கும்பல்களால் தறித்து எடுத்து வரப்படுவது பற்றியும் தெரிய வந்துள்ளது. (உ-77)

## படையினர் இருவர் பலி

(கொழும்பு)

இரணை இலுப்பைக் குளம் பகுதியில் கடந்த ஞாயிற்றுக் கிழமை விடுதலைப் புலிகளுக்கும் படையினர்க்கும் இடையே இடம் பெற்ற மோதலில் 2 படை வீரர்கள் பலியானதாக ஊடகத் தகவல்மையம் அறிவித்துள்ளது, (உ)

## தமிழில் உரை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பாதுகாப்பு கட்டளை அதிகாரி சுசில் சந்திரபால கடந்த திங்களன்று இரவு யாழ் சேவை மூலம் யாழ் குடா நாட்டு மக்களுக்கு தமிழில் உரை நிகழ்த்தினார்.

இவரின் உரை சுமார் 5 நிமிடங்கள் இடம் பெற்றது. (உ)

## யாழ். அணி வெற்றி

(சுண்டுககுளி)

இலங்கை உதை பந்தாட்ட சம்மேளனம் 'எவரெடி' வெற்றிக்கிண்ணத்துக்காக தேசிய மட்டத்தில் 9 ஆவது தடவையாக நடத்திய உதைபந்தாட்டசுற்றுப் போட்டியில் கடந்த 28 ஆம் திகதி யாழ் உதைப்பந்தாட்ட லீக் அணிக்கும், பருத்தித்துறைலீக் அணிக்கும் இடையில் இடம்பெற்ற போட்டியில் யாழ் அணி 5:2 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது. (செ-110)

## முன்பள்ளி விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

கடந்த ஞாயிற்றுக்கிழமை புலோலி துறையாமுனை இளங்கேஸ்வரன் முன்பள்ளி வருடாந்தவிளையாட்டுவிழா தலைவர் சண்முகசுந்தரம் தலைமையில் நடைபெற்றது;

இவ்விழாவில் சிறப்பு விருந்தினராக ஈ.பி.டி.பி. யின் வடமராட்சி அமைப்பாளரும் பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவருமான ஐ. ஸ்ரீரங்கேஸ்வரன் கலந்து கொண்டார்.

இவ் வைபவத்தில் உதவிக் கல்வி பணிப்பாளர், ஆரம்பப்பிள்ளைப பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் கிராம சேவையாளர் உள்ளூராட்சித் திணைக்கள சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர். (உ)

## விரைவில் மின்சாரம்

(ஊர்காவற்றுறை)

கடந்த 10 வருடங்களுக்கு மேலாக மின்சார வசதியின்றி இருந்த ஊர்காவற்றுறைப்பகுதிக்கு மீண்டும் மின்சாரம் வழங்குவதற்குரிய வேலைகள் நடை பெற்று வருகின்றன

இந்தவகையில் புதிய மின் கம்பங்கள் நாட்டப்பட்டு கேபிள்கள் பொருத்தப்பட்டு வருகின்றன; (உ-75)

யாழ். பிரதேச செயலக பிரிவில்

## ஆக்கப் பணிகளுக்கு 250 இலட்சம் நிதி

(யாழ்ப்பாணம்)

யாழ். பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட ஆலயங்கள், பாடசாலைகள், சனசமூக நிலையங்கள், விளையாட்டுக் கழகங்கள், இலக்கிய அமைப்புகள் ஆகியவற்றின் ஆக்கப் பணிகளுக்காக வடக்கு புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு நிதியிலிருந்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் 250 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இதற்கான காசோலை வழங்கும் வைபவம் கடந்த புதனன்று யாழ் அமைச்சு அலுவலகத்தில் இடம் பெற்றது. (உ)

## பட்டதாரி பயிலுநர் ஆசிரியர் ஆட்சேர்ப்பு விண்ணப்பம்

### இம்மாத நடுப்பகுதியில் கோரப்படும்

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாகாண கல்வியமைச்சினால் ஆயிரம் பட்டதாரி பயிலுநர் ஆசிரியருக்கான விண்ணப்பம் ஆகஸ்ட்மாத நடுப்பகுதியில் கோரப்படவுள்ளது.

இம்முறை ஆசிரியர் நியமனம் வழங்கும்போது சென்ற நியமனத்தில் பாடரீதியான நியமனம் வழங்கும் போது பாதிக்கப்பட்டவருக்கு முன்னுரிமை வழங்கப்படும் எனவும் முகாமைத்துவம், பி.ஏ. எவ்.எச்; என் டி ஏ, அரசியல் சிறப்பு, மெய்யியல் சிறப்பு, இந்து நாகரிகசிறப்பு பி எஸ்சி, கணக்கியல் (தென் கிழக்கு பல்கலைக்கழகம்) பட்டதாரிகளுக்கும் நியமனம் வழங்கப்படும் என மாகாணக் கல்விப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

எனவே விண்ணப்பம் கோரப்படும்போது வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தில் பதிவுசெய்த அனைத்து பட்டதாரிகளையும் விண்ணப்பிக்குமாறு யாழ். மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கத் தலைவர் அறிவித்துள்ளார்; (உ)

## தந்திரதேவா மகராஜ் இன்று நயினை நாகபூஷணி அம்மன் தரிசனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திற்கு ஆன்மீகப்பயணம் மேற்கொண்டுள்ள அமெரிக்க நாட்டு இந்து மதத் துறவி ஸ்ரீமத் தந்திரதேவா மகராஜ் சுவாமிக்கு இன்று காலை 8.30 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரியில் வரவேற்பு வழங்கப்படவுள்ளது. அதன் பின் அவரின் சொற்பொழிவு அங்கு இடம்பெறும்;

பி.ப 4-30 மணிக்கு ஊர்காவற்றுறை புளியங்கூடல் இத்தன் முத்துவிநாயகர் ஆலயததில் வரவேற்பும் பின் சொற்பொழிவும் இடம் பெறும் பின்னர் தீவுப் பகுதி ஆலயங்கள் மற்றும் 12க்கு பூசணி அம்பாள் ஆலயத்தில் வரவேற்பும் சொற்பொழிவும் இடம்பெறும்; (உ)

பாதுகாவலன் பத்திரிகையின்

## 125 வது ஆண்டு நிறைவு மலர் வெளியீடு

(ஈச்சமோட்டை)

எதிர்வரும் 4 ஆம் திகதி சனிக்கிழமை இலங்கையின் முதல் தமிழ் கத்தோலிக்க வாரஏடான பாதுகாவலன் பத்திரிகையின் 125 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் மலர் வெளியீடும் இடம்பெறவுள்ளன.

யாழ். மறைக்கல்வி நடுநிலையத்தில் காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ள இவ்விழா பாதுகாவலன் பத்திரிகை ஆசிரியர் அருட்தந்தை ஞானமரியாம்பிள்ளை தலைமையில் இடம்பெறவுள்ளது.

இவ் விழாவிற்கு பிரதம விருந்தினராக யாழ். மறை மாவட்ட ஆயர் அதிவண. தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையும், சிறப்பு விருந்தினராக தென்னிந்திய திருச்சபையின் ஆயர் மேதகு ஜெபநேசன் ஆண்டகையும் கலந்து கொள்ளவுள்ளனர்;

நூல் வெளியீட்டை மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையும் ஆசியுரையை குருமுதல்வர் அருட்தந்தை ஜே பி ஈ. செல்வராஜாவும் நிகழ்த்தவுள்ளனர்.

இப்பத்திரிகை 2000 ஆம் ஆண்டுக்கான சிறந்தபக்க வடிவமைப்பை மேற்கொள்ளும் பத்திரிகைக்குரிய தேசிய விருதைப் பெற்றது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-59)

## அடையாள பகிஷ்கரிப்புக்கு வர்த்தகர்கள் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

1995 ஆம் ஆண்டு இடப்பெயர்வினால் பாதிக்கப்பட்ட 600 இற்கும் மேற்பட்ட வர்த்தகர்களினால் நஷ்டஈட்டிற்கான விண்ணப்பங்கள் சம்பந்தப் பட்ட தரப்புகளுக்கு அனுப்பப்பட்டபோதிலும், இது வரை எந்தவொரு பயனும் கிடைக்காத நிலையில், அதனை எதிர்த்து ஓகஸ்ட் மாதத்தில் யாழ் குடாநாட்டில் உள்ள வர்த்தகர் சங்கங்களையும் அவற்றிற்கும் உட்பட்ட பிரதேசங்களிலுள்ள சகல கடைகளும் பூட்டி ஒருநாள் அடையாள பகிஷ்கரிப்பும் ஆர்ப்பாட்டப் பேரணியும் நடத்த யாழ். மாவட்ட வர்த்தக சங்கங்களின் சம்மேளனம் தீர்மானித்துள்ளது.

5 ஆம் திகதி இடம்பெறவுள்ள வர்த்தக சங்கக் கூட்டத்தில பகிஷ்கரிப்புத் தொடர்பான தினம் தீர்மானிக்கப்படவுள்ளது. (உ)

## விவசாய, குடிநீர்க் கிணறுகள் புனரமைப்பு

(ஏழாலை)

மல்லாகம் தெற்கு, மத்தி ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் விவசாய, குடிநீர்க் கிணறுகள் பட்டினிக்கெதிரான நிறுவனத்தினால் புனரமைப்பு செய்யப்பட்டு வருகின்றன.

இந்த வகையில் மல்லாகம் தெற்குப் பகுதியில 4 விவசாயக் கிணறுகள் பட்டினிக்கெதிரான நிறுவனத்தினால் புனரமைக்கப்பட்டு விவசாயிகளின் பாவனைக்கு விடப்பட்டுள்ளன.

மேலும் மல்லாகம் மத்தி கிராம அலுவலர் பிரிவில் குடிநீர்க்கிணறுகள் புனரமைக்கப்பட்டு பாவனைக்கு விடப்படவுள்ளன. (உ-12)

## வீரசிங்கம் மண்டபத்தின் திருத்தத்திற்கு ரூ12½லட்சம்

(யாழ்ப்பாணம்)

யாழ் வீரசிங்கம மண்டபத்தின் புனரமைப்பு வேலைகளுக்கென வடக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முதற்கட்டமாக 12 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவிற்கான காசோலையை யாழ்மாவட்ட கூட்டுறவுச்சபை செயலாளர் எஸ். சிவசுப்பிரமணியத்திடம் நேற்று முன்தினம் கையளித்துள்ளார்.

யுத்த அனர்த்தங்களினால் சிதைவுற்ற வீரசிங்கம் மண்டபம வடபகுதி புனர்வாழ்வு புனரமைப்பு அதிகார சபை வழங்கிய நிதிகளில் பூரணமாகத் திருத்தப்படாத நிலையில் இந்த மண்டபத்திற்கு புனரமைப்புக்கென ஒதுக்கப்பட்ட 25 லட்சம் ரூபாவில் 12 லட்சத்து 50 ஆயிரம் முதற்கட்டமாக வழங்கப்பட்டுள்ளது, (வ)

# நாட்டின் மேன்மையை காக்க முன்வருக!

## சிங்கப்பூர் துணைப் பிரதமர் அழைப்பு

(சிங்கப்பூர்)

ஒரு ஆயுதப் படையின் வலிமை படைவீரர்களின் திறமையிலுள்ளதே தவிர ஆயுதத் தளபாடங்களில் இல்லை என்று சிங்கப்பூர் துணைப்பிரதமர் லோன் தெரிவித்தார்.

சிங்கப்பூர் படைப் பயிற்சிக் கல்லூரியின் விழாவொன்றில் உரைநிகழ்த்துகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சிங்கப்பூர் படையின் நம்பகத்தன்மையையும் நாட்டின் மேன்மையையும் எல்லோரும் காக்க முன்வரவேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார். (து)

# தாய்வானில் சூறாவளி 36 பேரை காணவில்லை

## 16 பேர் பலி

(தைப்பி)

தாய்வான்கிழக்குப்பகுதியில் நேற்று முன்தினம் தொராஜி என்ற சூறாவளி தாக்கியதில் 16பேர் உயிரிழந்துள்ளதுடன் 36பேர் காணாமற்போயுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தாய்வானின் தெற்குப் பகுதியில் கடந்த வாரம் ரமி என்ற சூறாவளி தாக்கியதில் மூவர் பலியானமை குறிப்பிடத்தக்கது.

இவ்வருடத்தில் இதுவரை 8 சூறாவளிகள் தாய்வானில் ஏற்பட்டிருப்பதாக கூறப்படுகிறது. (உ-7)

# ஈழத்தமிழர் ஆதரவு மாநாடு நடத்த தடையில்லை

[லண்டன்]

தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ நெடுமாறனால் கடந்த வருடம் ஏற்பாடுசெய்யப்பட்ட ஈழத்தமிழர் ஆதரவு மாநாட்டிற்கு விதிக்கப்பட்ட தடை சட்டவிரோதமானதென தமிழக நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

கடந்த வருடம் மேமாதம் நடத்த ஏற்பாடாகியிருந்த இம் மாநாட்டிற்கு பொலிஸார் முதலில் அனுமதிவழங்கியிருந்த போதும் திடீரென இம்மாநாட்டிற்குதடைவிதித்தனர்.

இத்தடையை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட மனுவினை விசாரித்த சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி இத்தடை சட்ட விரோதமானதெனவும் இம்மாநாட்டை நடத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் தமது தீர்ப்பில் தெரிவித்துள்ளார். [உ-5]

# பொலிஸ் அதிகாரிகள் இடமாற்றம் உள் நோக்கம் கொண்ட செயல்

## ஜெயலலிதா சாடல்

(சென்னை)

தமிழ் நாட்டு மூத்த பொலிஸ் அதிகாரிகளை மத்திய அரசு இடமாற்றம் செய்தமை அரசியல் உள்நோக்கம் கொண்டது என்று முதல்வர் ஜெயலலிதா சாடியுள்ளார்.

செய்தியாளர்களுக்கு இதுபற்றித் தெரிவிக்கையில் தான் மத்திய அரசின் செயல் பற்றி எதுவும் சொல்ல விரும்பவில்லையென்றும், தமிழக அரசு இதுபற்றி ஆராய்ந்து அறிக்கையை மத்திய அரசிற்கு விரைவில் அனுப்பும் என்றும் தெரிவித்தார்.

த.மா.க. வின் தமிழக சட்டசபை உறுப்பினர் பால சுப்பிரமணியம் கருத்துத் தெரிவிக்கையில், சட்டத்துக்குப்புறம்பான பழிவாங்கும் மனோநிலையைக் கைவிட்டு மத்திய, மாநில அரசுகளின் உறவுகளைச் சீராகப் பேணுவதற்கு மத்திய அரசு முன்வரவேண்டும் என்று தெரிவித்தார். (து)

# கேரள மாநிலத்தில் மீண்டும் பல வர்ண மழை

(திருவனந்தபுரம்)

கேரள மாநிலத்தில் பல வர்ண மழை பெய்துள்ளது

கடந்த ஒரு வாரத்துக்கு முன் இந்தியாவிலுள்ள கேரள மாநிலத்தில் ஒரு கிராமத்தில் சிவப்பு மழை பொழிந்தது யாவரும் அறிந்ததே.

நேற்று முன் தினம் கேரள மாநிலத்தில் பரவலாக ஆங்காங்கே பல வர்ண மழை பெய்திருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

கோழிக் கோடு பக்கத்தில் பச்சை மழையும் வேறு ஒரு கிராமத்தில் கறுப்பு மழையும் இன்னொரு இடத்தில் சிவப்பு மழையும் மஞ்சள் மழை இன்னொரு இடத்திலுமாகப் பெய்திருக்கிறது.

நீர் நிலை ஆராய்ச்சியாளர்கள் இம்மழை நீர்களை சேகரித்து ஆராய்ந்து வருவதாகவும் அறிக்கைகள் வர ஒரு வாரகாலம் எடுக்கலாமென்றும் தெரிவிக்கப்படுகிறது.

இற்றை வரை இந்த வர்ண மழையால் எந்தவித பக்க விளைவுகளும் ஏற்படவில்லை என்று தெரியவருகிறது.

வேறு நாடுகளிலும் முன்பு வர்ண மழைகள் பெய்திருப்பதாகச் செய்திகள் ஏற்கனவே வெளிவந்துள்ளன. (து)

## உலக தரிசனம்

# சந்திப்பு

[சென்னை]

இந்தோனேஷிய அதிபர் மேகவதி சுகர்னோ புத்திரியின் கணவர் தமிழ் நாடு முதலமைச்சர் ஜெயலலிதாவைச் சந்தித்துப் பேசியுள்ளார்.

சென்னையில் இடம்பெற்ற இச்சந்திப்பு மரியாதை நிமித்தமான சந்திப்பென்று தெரிவிக்கப்படுகிறது. [து]

# இந்திய-பிரான்ஸ் நாடுகள் ஏழாவது சுற்றுப்பேச்சு

(புதுடில்லி)

இந்தியாவும் பிரான்சும் பல முக்கிய பிரச்சினைகள் பற்றி பேச்சுவார்த்தையில் இறங்கியுள்ளன.

இந்திய அணுவாயுத சோதனைக்குப் பின் நடைபெறும் ஏழாவது சுற்றுப் பேச்சு வார்த்தை இதுவாகும்.

இப்பேச்சு வார்த்தையில் பிரான்ஸ் அதிபரின் செயலரும் இந்தியத் தரப்பின் பிரதமரின் முதன்மைச் செயலர் மிஸ்திராவும் ஈடுபடுகிறார்கள்.

சர்வதேசப் பயங்கரவாதத் தடுப்பு, அணுவாயுத தடுப்பு பற்றியும் மற்றும் பொருளாதார நிலைகள் பற்றியும் பேச்சுவார்த்தை இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (து)

# ஊர்காவற்றுறையில் 9 அபி. திட்டங்கள்

## 9 இலட்சம் நிதி ஒதுக்கீடு

[ஊர்காவற்றுறை]

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இவ்வருடடன்முகப்படுத்தப்பட்ட வரவு,செலவுத் திட்ட நிதி 9 இலட்சம் ரூபா மூலம் 9 அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வதற்கு நிதி பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

மெலிஞ்சிமுனை குழாய்நீர் விநியோகம் தம்பாட்டி குழாய் நீர் விநியோகம் ஊர்காவற்றுறையில் உள்ள 18 பாடசாலைகளுக்குகற்பித்தல் உபகரணங்கள் கொள்வனவு புளியங்கூடல் சின்னமடு றோ.க. பாடசாலை புனர்நிர்மாணம் ஆகியவற்றுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாவும்.

எழுவை தீவு குழாய் நீர்விநியோகம் நாரந்தனை றோ.க. மகாவித்தியாலய அதிபர் அறை புனர் நிர்மாணம் ஆகியவற்றுக்கு தலா ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவும்,

கரம்பொன் சிறிய புஷ்ப மகளிர் மகா வித்தியாலய கணனி அறை அமைப்பு, கரம்பொன் சண்முகநாத மகாவித்தியாலய கணனி அறை அமைப்பு ஆகியவற்றுக்கு தலா 50 ஆயிரம் ரூபாவும்,

தென்னங்கன்று கொள்வனவுக்கு 90 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (உ-75)

# வரணிப் பகுதி தரிசு நிலங்களில் மண் அகழ்வு அதிகரிப்பு

(துன்னாலை)

வரணி வடக்குப் பகுதியில் தரிசு நிலமாகவுள்ள காணிகளில் மண் அகழ்வு என்றுமில்லாத வகையில் அதிகளவாக இடம்பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

காணி உரிமையாளர்களே இவ்வாறான நடவடிக்கையில் ஈடுபடுவதாகவும் இவ்வாறு அகழப்படும் ஒருலோட் மண் 200 ரூபா வரையில் விற்பனை செய்யப்படுவதாகவும் கூறப்படுகிறது.

இவ்வாறு அகழப்படும் மண் வலிகாமப் பகுதிக்கு எடுத்துச் செல்லப்படுவதும் குறிப்பிடத்தக்கது. (உ-41)

# புலிகளின் தாக்குதலில் 5ஊர்காவல் படையினர்பலி

(கொழும்பு)

பொலநறுவை மகாவலி 'பி' வலயத்தின் நாகஸ்தலப் பகுதியில்விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் ஐந்து ஊர்காவல் படையினர் கொல்லப்பட்டுள்ளனர்.

உயிரிழந்த ஊர்காவல் படை வீரர்களின் சடலங்கள் வெலிகந்த வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (செ)

# சமய சொற்பொழிவு

நீர்வேலி வாய்க்கால் தரவை விநாயகப் பெருமானின் வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு தினமும் மாலை 6.30 மணிக்கு யாழ் பல்கலைக்கழக கலைப்பீட இரண்டாம் வருடமாணவன் தி. செல்வமனோகரனால் சொற்பொழிவு ஆற்றப்பட்டு வருகிறது. [செ]

# இன்று

பச்சிலைப்பள்ளி கலாசாரப் பேரவை அபிவிருத்தித் தொண்டர்களின் கலாசார விழா இன்று பருத்தித்துறை அததிபடிப் பிள்ளையார் கோவில் அருகாமையில் உள்ள மண்டபத்தில் பச்சிலைப் பள்ளி பிரதேச கலைகலாசாரப் பேரவைத் தலைவர் எஸ் புத்திசிகாமணி (உதவி அரச அதிபர்) தலைமையில் நடைபெறவுள்ளது.

முதன்மை விருந்தினராக யாழ் மாவட்ட ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி பிரதி அமைப்பாளர் கே. மணிபல்லவராஜனும், சிறப்பு விருந்தினர்களாக பருத்தித்துறை பிரதேச சபைத்தலைவர் ஐ. ஸ்ரீரங்கேஸ்வரன் தென்மராட்சி ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி அமைப்பாளர் எஸ் அலெக்சாண்டர் ரீ ஸ்ரீகாந்தா, எஸ். மெட்ராஸ்மெயில், எஸ் திருச்செல்வம் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக பிரதேச செயலர்களான ஏ சிவசுவாமி, எஸ். ஸ்ரீநிவாசன், வி பி வேலயுதபிள்ளை, பருத்தித்துறை மேலதிக மாவட்ட பதிவாளர் எஸ். ஈஸ்வரதாஸன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இளைப்பாறிய நீதிபதி எம். திருநாவுக்கரசு சிறப்புச் சொற்பொழிவாற்றுவார். (உ-52)

# மாணவனைக் காணவில்லை

[யாழ்ப்பாணம்]

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மாணவனைக் காணவில்லை என யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரியிடம் நேற்றைய தினம் மேற்படி மாணவனின் தந்தை முறைப்பாடு செய்துள்ளார்.

துன்னாலை கிழக்கு கரவெட்டியைச் சேர்ந்த வல்லிபுரம்பிரகலாதனன் (வயது17) என்பவரே சென்றமாதம் 22 ஆம் திகதி காணாமல் போன மாணவராவார். (உ-6)

# தொடர்பு கொள்க

(யாழ்ப்பாணம்)

கீழே பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளவர்களை சர்வதேச செஞ்சிலுவைக் குழுவுடன் உடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

ருணாகடாட்சகுரு உதயசஜந்தா மீன இல்லம், வீரமாணிக்க தேவன் துறை பாதிரி வளவு மயிலிட்டி.

சிதம்பரபிள்ளை சிவதாசன் சிறுவர் இல்லம் திருநெல்வேலி. (உ)

# சுவாமி காவுவதில் தாக்குதல்

சுவாமி காவுவதில் ஏற்பட்ட இழுபறியினால் இளைஞர் ஒருவர் தாக்கப்பட்டுள்ளார்.

அளவெட்டிப் பகுதி ஆலயமொன்றில் வருடாந்த மகோற்சவ காலத்தில் சுவாமி காவுவதில் இரு இளைஞர் குழுக்களிடையே கருத்து முரண்பாடு ஏற்பட்டதாகவும்.

இதன் பின்னணியில் இளைஞர் ஒருவரை மற்றைய அணி இளைஞர்கள் இணைந்து தாக்கியதாகவும் தெரிய வந்துள்ளது. (உ-12)

# பட்டப்பகலில் திருட்டு

(ஏழாலை)

மல்லாகம் பகுதியில் உள்ள வீடொன்றில் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்க நகைகள் பட்டப்பகலில் களவாடப்பட்டுள்ளன.

நீதிமன்ற வீதியில் உள்ள க. சண்முகராசா என்பவரது வீட்டில் கடந்த புதன் கிழமையன்று நண்பகல் வேளை வீட்டிலிருந்தவர்கள் வெளியே சென்றிருந்தசமயம் தங்கநகைகள் களவாடப்பட்டுள்ளதாகத் தெரிய வந்துள்ளது. (உ-12)

# ஆசிரியர் பயிற்சிக் கருத்தரங்கு

[யாழ்ப்பாணம்]

''சனத்தொகையும் குடும்ப நல வாழ்வும்'' என்னும் விடயம் தொடர்பான ஆசிரியர் பயிற்சிக் கருத்தரங்கு 3ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30மணிக்கு யாழ். மத்தியகல்லூரியில்நடைபெறவுள்ளது.

சம்பந்தப்பட்ட ஆசிரியர்களைத் தவறாது இக்கருத்தரங்கில் கலந்துகொள்ளுமாறு தீவக வலயக் கல்விப்பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் அறிவித்துள்ளார். (உ)

# கைக் குண்டு கண்டெடுப்பு

[கொழும்பு]

திருகோணமலை தோரான் காட்டுப் பகுதியில் புதர்களிடையே மறைத்து வைக்கப்பட்டிருந்த பார்சல் ஒன்றில் இருந்து கைக் குண்டு ஒன்றைக் கண்டெடுத்து பொலிஸார் அழித்துள்ளனர். [உ]

ஒருவனுக்கு நல்ல இனத்தைப் போற் சிறந்த துணை வேறில்லை.

குறள்

## வலம்புரி

### 'போர் ஓயவில்லை

கட்டுநாயக்கா விமானத் தளமும் விமானப் படைத் தளமும் தாக்கப்பட்டதன் விளைவாக யுத்த விமானங்கள் அழிவுற்றன. விடுதலைப் புலிகளை ஒடுக்கி வருகிறோம் என்ற அரசின் தகவலுக்கு கட்டுநாயக்கா விமானத் தளத் தாக்குதல் பலத்த அடியாக அமைந்து விட்டது. விமானப் படையினரின் கோட்டைக்குள்ளேயே புகுந்து விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியுள்ளனரெனில் அவர்களின்பலம்எத்தகையதென்பதை உணர்ந்துகொள்ள முடியும். இந்நிலையில் யுத்தத்தின் மூலம் புலிகளை அடக்கவோ, நாட்டில் அமைதியை ஏற்படுத்தவோ முடியாதென்பது சர்வ நிச்சயம்.

இந்நிலையில், இலங்கை அரசு மீண்டும் பாகிஸ்தானிடமிருந்து யுத்த விமானங்களை வாடகைக்கு அமர்த்தவுள்ளது சொந்தமாக வைத்திருந்த விமானங்களையே பாதுகாப்பாக வைத்திருக்க முடியாமல் போன அரசினால் வாடகை விமானங்களை எப்படிப்பாதுகாக்க முடியுமென்பது கேள்விக்குறியே. எனினும் கட்டுநாயக்கா விமானத்தளம் தாக்கப்பட்டதனால், அதிஷ்டம் பாகிஸ்தானுக்கே. ஏனெனில் யாழ்ப்பாணத்தில் தள்ளிஸ்ராட் எடுக்கும் கார், மினிபஸ் போன்ற ரகத்தில் பாகிஸ்தானிடம் யுத்த விமானங்கள் உண்டு. இவ்வாறு இயங்க, இயக்க முடியாத விமானங்களையே பாகிஸ்தான், இலங்கைக்கு வாடகைக்கு விடும்.

ஓடினால்வாடகை, ஒரேயடியாகப் போனால் மொத்தத்தொகை என்ற வகையில் பழுதடைந்த யுத்த விமானத்[illegible] பாகிஸ்தான் நிறை[illegible]வ உழைக்கப் போவது திண்ணம்.

இதேவேளைவிடுதலைப் புலிகளும், பாகிஸ்தானின் பழுதடைந்த விமானத்திற்காக தம்மிடமுள்ள பெறுமதியான விமானத் தகர்ப்பு ஏவுகணையை செலவிட வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

என் செய்வது, இலங்காபுரிக்கு அழிவு நிச்சயம் என்பது முடிவாகி விட்டால் என்னதான் நடந்தாலும யுத்தத்தைத்தடுக்கமுடியாதென்பதை நோர்வேத் தூதுவர் எரிக் சோலை வெளியேற்றியதிலிருந்தும், விமானத்தளத் தாக்குதலுக்குப் பின்னரும் யுத்தவிமானங்களை வாடகைக்கு அமர்த்தியதிலிருந்தும்உணரமுடிகிறது.

# பாடசாலைக் குடும்பமெனும் கட்டமைப்பில்
# ஒற்றுமையுடன் முன் நோக்கிய ஆரம்பக் கல்வி

ஒருவரின் கல்வி பற்றிய தீர்மானமானது அவர் அறிந்து வைத்துள்ளவற்றைக் கொண்டு எடுக்கப்படுவதில்லை. மாறாக அவரது செயற்பாட்டைக் கொண்டே தீர்மானிக்கப்படும். கல்வி என்பது தகவல்களைத்தேடிப் பெறல் மட்டுமல்ல. வாழ்க்கையின் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் தோன்றும் அறைகூவல்களை வெற்றிகரமாக எதிர் கொள்ளக் கூடிய சமநிலையான, முழுமையான ஆளுமைப் பண்புகளையும், அடக்கமான மனதையும் கொண்ட ஒருநற் பிரஜையை உருவாக்குவதாகும். இதற்கான அடிப்படைகளை ஆரம்பக்கல்வியிலிருந்தே வழங்க வேண்டியுள்ளது;

### ஆரம்பக் கல்வி

ஆரம்பக்கல்வி என்பது உருமாறும் வல்லமை மிக்க மனித உரிமையாக உலக அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. ஜனநாயகம், சுதந்திரம், மனிதவள மேம்பாடு யாவற்றிற்கும் அதுவே. அததிவாரம் கல்வி கற்பதற்கான உரிமை வகுப்பறையை வழி நடத்துகின்றது. பாடசாலைகளில் கற்றல் செயல் முறைசார்ந்த வெளிப்பாட்டு ஆக்கத்திறன்களை ஏற்படுத்துகின்றது ஆரம்பக் கல்வித்துறையே மனித வாழ்க்கையில் ஓர் உறுதியான ஆரம்பம் என்ற வகையில் இத்துறை அபிவிருத்தி நோக்கியவிழிப்புணர்வுகள் சமூகமயமாகி எழுச்சியடைந்துள்ளன.

இந்த எழுச்சியின் ஒருகூறாகவே "பாடசாலைக் குடும்பம்" என்றகருத்தியல் செயல் வடிவம் பெற்றது. புதிய கல்விச் சீர்திருத்தத்தினூடு இச் செயற்திட்டம் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

எனினும் இதன் முழுமையான நலவிளைவுகள் எமது பிரதேசங்களில இன்னும் எட்டப்படாமலே உள்ளன.

கல்வி வலய மட்டத்தில் அமைந்துள்ள ஆரம்பப் பாடசாலைகளைபுவியியல் அமைப்புக்கேற்ப, தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு குழுக்களாக்கி ஒன்று படுத்தி கல்வி இலக்குகளை விரைவாக அடையும் நோக்குடன் உருவாக்கப்படும் ஓர் அமைப்பே பாடசாலைக் குடும்பமாகும்.

### கல்வி அபிவிருத்தி

தமது ஆரம்பப் பாடசாலைகளின் வினைத் திறனையும், பயனுறுதித் தன்மையையும் அபிவருத்தி செய்யும் நோக்குடன் அதிபர்கள, ஆசிரியர்கள், பெற்றோர்கள யாவரும் இணைந்து பாடசாலை மீது நம்பிக்கை வைப்பதும், பாடசாலை எங்களுடையது அதில் நிலையான அபிவிருத்தியை ஏற்படுத்துவது எங்கள் பொறுப்பு என்ற நோக்குடன் சில ஆரம்பப் பாடசாலைகளைக் குடும்பமாக ஒன்று கூட்டி கல்வி அபிவிருத்திச் செயற்பாடுகளைத் திட்டமிடுவதும், முறையாக நடைமுறைப்படுத்துவதும் இங்கு எதிர்பார்க்கப் படுகின்றது.

கல்வி அபிவிருத்திக்கு அவசியமான சக்தியையும், ஒற்றுமையையும் சுதந்திரத்தையும் இவ்வாறு இணைக்கப்பட்ட பாடசாலைக் குடும்பம் பெறும் வாய்ப்புக்கள் அதிகமாக உள்ளதால், அவசியமான கல்வி அபிவிருத்தி வேலைத் திட்டங்களை இனம் கண்டும் கொள்ளலாம். இத்

**பா. தனபாலன்**
உப பீடாதிபதி
யாழ்.தேசியகல்வியியற்கல்லூரி

திட்டங்களை நடைமுறைப் படுத்தி கல்விப்பண்பு விருத்தியினை முன்னெடுத்துச் செல்வதும பாடசாலைக் குடும்பத்தின் முக்கிய நோக்கமாகும். 1981 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட கொத்தணி முறையின் நன்முறைத் தாக்கங்களை மையமாக வைத்து, நவீன தேவைகளுடன், பாடசாலைக் குடும்ப முறைமை நடைமுறைப் படுத்தப்படுகின்றது. பொதுவாக மிக முக்கிய கல்விப் பருவமான ஆரம்பக் கல்விப் பிள்ளைக்குப் பாடசாலையில்;

1) வகுப்பறையில் ஒரு பிள்ளைக்குக கிடைக்கக் கூடிய இடமும. தளபாடமும்.

2) செயற்பாட்டு அறை, வாசிப்பு மூலையில் ஒரு பிள்ளைக்குக் கிடைக்கக்கூடிய வளங்கள,

3 ஒரு பிள்ளைக்குக்கிடைக் கூடிய விளையாட்டுப் பிரதேசம்

4) பாடசாலை ரீதியாகவும, பாட, முதன்மை நிலை ரீதியாக கற்றல்- கற்பித்தல் துணைச்சாதன தொகுதிகளினகிடைப்பனவு

5) வகுப்பு ரீதியாக தேவையின் நூறறு வீதமாக பயிற்றப்பட்ட ஆசிரியர் கிடைக்கும் தன்மை,

6) மொத்த ஆரம்பக்கல்விச் செலவினங்களில கல்விப் பண்புசார் உள்வீடுகளின் செலவினங்களை அதிகரித்தல்

7) நூல்கள், வெளியீடுகள் ஏனைய வளங்கள் கிடைக்கும் தன்மைகள்.

### மதிப்பீட்டாய்வு

இவை ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கு முறையாகக் கிடைககாவிடின் அவர்களது எதிர் காலவாழ்க்கையும் நீடித்த கல்வியும் சிதைந்துவிடும், பாடசாலையின் ஊட்டப் பிரதேசத்தில் இருந்தாவது மேற்குறிப்பிட்டவளங்களைப் பெற்றுக் கொடுக்கும் ஓர் அத்தியாவசிய முறைமையாகவே பாடசாலைக் குடும்ப முறைமை அமைந்துள்ளது. ஆரம்பப் பாடசாலைகளின் அக-புற வினைத்திறன்களை, உள்ளீடுகள் படிமுறைகள் வெளியீடுகள் அளவிடும் காரணிகள் தொடர்பாக எழும் பிரச்சினைகளை இனம் காண்பதற்கு இதுவரை பாடசாலை மட்டத்தில் முறைமையான மதிப்பீட்டாய்வுகள் மேற்கொள்ளப்படவில்லை. குறித்த சில விடயங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் பல அதிர்ச்சி தரும் முடிவுகள் வெளியாகியிருந்தன. இந்நிலையில்இத்துறை அபிவிருத்திக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டதுடன் ஆரம்பப் பாடசாலைகளின் பண்பு ரீதியான அபிவிருத்திகளை மேலும் பல பரிமாணங்களில் விருத்தியாக்கும் செயற் திட்டங்களில் ஒன்றாகவே பாடசாலைக் குடும்பச் செயற்திட்டம் அமுலாக்கப்பட்டு வருகின்றது இதன் குறிக்கோள்களாவன:

★ தேசிய மாகாண கல்விக் கொள்கைகளுக்கு ஏற்ப பாடசாலை அபிவிருத்திக்கு உதவும் வேலைத் திட்டங்களைச் சுயாதீனமாக இனம்காணல்.

★ பாடசாலைக் குடும்பத்தினுள் அடங்கிய வளம் கூடியதும், வளம் குறைந்ததுமான சகோதரப் பாடசாலைகளுக்கிடையில் அறிவு, பௌதீக மானிட வளங்களைப் பரிமாற்றம் செய்வதற்கான வழிகளை ஒற்றுமையுடன் ஏற்படுத்திக் கொடுத்தல்;

★ மாணவர்களின் கல்வி அபிவிருத்திக்கு ஒத்தவகையில் இணைபாடவிதானச் செயற்பாட்டு விடயங்களை உள்ளடக்கிய வேலைத்திட்டங்களை அமைத்துக் கொள்ளல்.

★ பாடசாலைகளின் அபிவிருத்திக்காக அரச சார்பற்ற, பொது நிறுவனங்கள், நலன் விரும்பிகளிடமிருந்துபல்வேறு வளங்களைத் திரட்டிப் பயன்படுத்தல்:

★ பாடசாலைகளிடையே விசேட ஆற்றல்களைப் பரிமாறிக் கொள்வதுடன் ஆசிரியர்- மாணவர் - சமூகத்தவரிடையே ஒற்றுமையைக்கட்டி எழுப்புதல்.

★ பிள்ளைகளை வகுப்பறைக்குள் மட்டும் உட்பட்டிருக்க வைக்காது, சூழலை வினைத்திறனுடன் பயன்படுத்துவதன் மூலம் கற்றல் சந்தர்ப்பங்களை உருவாக்குதல்

★ ஏற்றுக் கொள்ளப்பட்ட விழுமியங்களைப் பின்பற்றுவதற்கும் கல சாரத்தை மதிப்பதற்கும் தேவையான சமூகத்திறன்களை பெற்றுக் கொள்ள சந்தர்ப்பங்கள் வழங்கல்.

★ தனிப்பட்ட பாடசாலை உணர்வுகளை நீக்கி பாடசாலைகளின் சமத்துவங்களுக்கு ஊடாகக் கல்விச் சமத்துவத்தை ஏற்படுத்தல்.

★ அரசாங்கப் பாடசாலைகளிடையே கிடைக்கும் வரையறுக்கப்பட்ட வளங்களைப் பெற்றுக் கொள்வதில்காணப்படும் போட்டிகளைக் குறைத்தல்.

★ பாடசாலைக் கல்வி முறையில் சமத்துவம், தரம், வினைத்திறன் என்பவற்றை ஏற்படுத்தலுடன் அயற்பாடசாலைகளிடையே ஆரோக்கியமற்ற போட்டி நிலைகளைத் தவிர்த்தல்;

### முகாமைத்துவ அமைப்பு

இவ்வாறான நோக்கங்களை நிறைவேற்றப் பாடசாலைக் குடும்பத்தை இனம் காணல், செயல் முறைகள், வேலைத் திட்டங்களை ஒழுங்கமைத்தல், மேற்பார்வைச் செயல் ஒழுங்குகள், என்பவற்றை முகாமைத்துவ கட்டமைப்பு திட்டமிடும். பாடசாலைக் குடும்பத்துக்குரிய அதிபர்கள் அடங்கிய குழுவே முகாமைத்துவ அமைப்பாகும் இதற்கு ஒவ்வொரு வருடமும் ஒரு தலைவரும், உபதலைவரும் தெரிவு செய்யப்படுவர். தவணைக்கு ஒருமுறையாவது இவர்கள் ஒன்றுகூடி நடைமுறைப்படுத்தப்படும் செயற் திட்டங்களை மதிப்பிடல் வேண்டும். மேலும் பாடசாலைக் குடும்ப அடிப்படை ஆசிரியர் தொழில் வாண்மை அபிவிருத்திச் செயற்பாடு, பாடவிதான அபிவிருத்தி, நலனோன்புச் செயற்பாடுகள், சமூகப் பங்களிப்பு நிகழ்ச்சித் திட்டங்களையும் வழிகாட்டல் என்பவற்றை முகாமைத்துவ கட்டமைப்பு ஒழுங்கமைக்கும்;

இவ்வாறாகக் குடும்பப் பாடசாலை முறைமை ஆரம்பக்கல்வி அபிவிருத்திக்கான ஒரு புது வழியாக நோக்கப்படுகின்றது; இருக்கின்ற மனித-பௌதீக வளங்களைக் கொண்டே கூடுதல் பயன் பெறுதல். பல்வேறு பரிமாணங்களில் வளங்களைத் திரட்டுதல் ஆசிரியர்களுக்கான கல்விச் செயலமர்வுகள் புதுப்பிக்கும் பயிற்சிகள் ஆசிரியப் பரிவர்த்தனைத் திட்டங்கள் என்பவற்றை குடும்பப் பாடசாலை நிகழ்ச்சித் திட்டத்தில் ஒருங்கமைக்கலாம். அண்மையில் ஆரம்பக் கல்வியினால் ஏற்படும் ஆக்கபூர்வமான பலாபலன்கள பற்றிய ஆய்வறிக்கையை உலக வங்கி வெளியிட்டது. இடைநிலை மூன்றாம் நிலைக் கல்வியை விட ஆரம்பக் கல்வியில் கூடுதலான முதலீடு செய்வதன் மூலம் பெரும் பயன் கிடைக்கும் என்ற வகையில் அது தனது செயற் திட்டங்களை தீவிரமாக விஸ்தரித்து வருகின்றது. இவ்வகையில் எமது பிரதேசத்திலும் இத்துறை சார்ந்த அபிவிருத்தியில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டியுள்ளது □

## தினசரி தியானம்

### விசுவரூபம்

அண்டநாயகா, நலம் கேடும் அனைத்தும் உன் செயலகளே என்பதை நான்அறிந்து கொவேனாக.

அண்டத்தினுடைய நடை முறையில் இனிமை தென்படுவது போன்று கோரக் காட்சிகளும் தென்படுகின்றன. பஞ்சம், கொள்ளை நோய், பூகம்பம், போராட்டம இத்தகையவைகளுக்கு இறைவன் ஏன் இடங்கொடுத்தான் என்ற கேள்வி எழுகிறது. குறுகிய காட்சியில் அவைகள் கோரமானவைகளே. பரந்தவிசுவரூபத்தின் கண் வைத்துப் பார்க்குமிடத்து உண்மை புலப்படும் துன்பமும் அவனுடைய அருளினின்று வருகிறது துன்பங்கள வாயிலாக உயிர்களை அவன் பண்படுத்து கிறான்.

ஓரெழுத்தாலே உலகெங்குந்தானாகி
ஈரெழுத்தாலே இசைந்தங்கிருவராய்
மூவெழுத்தாலே முளைக் கிறை சோதியை
மாவெழுத்தாலே மயக்கமே உற்றதே.

-திருமந்திரம்-

ஸ்ரீமத்சுவாமி சித்பவானந்தர்.

சர்வஜன வாக்கெடுப்பு
## இடம் பெயர்ந்த மக்கள் வாக்களிக்க ஆர்வமில்லை

(வவுனியா)

வவுனியாவில் சுமார் 20 ஆயிரம் இடம் பெயர்ந்தோர் உள்ள போதும் 400 பேர் மட்டுமே சர்வஜன வாக்கெடுப்பிற்கு விண்ணப்பித்துள்ளதாக வவுனியா தேர்தல் அதிகாரி தெரிவித்துள்ளார்.

இதேவேளை வவுனியாவில் சர்வஜன வாக்கெடுப்பு பற்றி மக்கள் ஆர்வம் குன்றிக் காணப்படுவதாகவும் வவுனியா செய்தியாளர் அறிவித்துள்ளார்; (ம)

# இராஜினாமா செய்யப்போவதாக பிரதமர் வாஜ்பாய் அறிவிப்பு


## இந்திய அரசியலில் பரபரப்பு

(இந்தியா)

இந்தியப் பிரதமர் அடல் பிகாரி வாஜ்பாய் தமது பிரதமர் பதவியை இராஜினாமா செய்யப் போவதாக கட்சியின் நாடாளுமன்ற குழுக்கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.

நேற்றுக்காலை கூடிய பாரதிய ஜனதாக் கட்சியின் நாடாளுமன்றக் குழுக்கூட்டத்தில் கூட்டணிக்கட்சிகளை கட்டுக்கோப்புடன் வழி நடத்த முடியவில்லையென்றும், உடல் நிலை சீரில்லாததாலும் தமது பிரதமர் பதவியை இராஜினாமா செய்யப் போவதாக தெரிவித்தார்.

இதனால் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது ஆனால் பிரதமர் இராஜினாமா செய்வதை நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும் ஏற்றுக் கொள்ளவில்லையென நாடாளுமன்ற விவகார அமைச்சர் பிரமோத் மாகாஜன் தெரிவித்தார்.



ரெஸ்ட் ஒவ் இந்தியா நிறுவனத்தின் முதலீடுகளில் முறைகேடுகள் நடந்ததாக கூட்டணிக்கட்சியான சிவசேனை பிரதமர் அலுவலகம் மீதுகுற்றம் சுமத்தியதை அடுத்தே பிரதமர்வாஜ்பாய் இராஜினாமா செய்யப்போவதாக அறிவித்தார் ஆனால் பிரதமர்மீது தாம்குற்றம் சுமத்தவில்லை என்றும் விசாரணை நடத்தும்படியே தாம் கோரியதாகவும் சிவசேனைக் கட்சித்தலைவர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் பி ஜே பியின் முக்கிய அமைச்சர்களான ஜஸ்வந்சிங் எல் கே அத்வானி மற்றும் முரளிமனோகர் ஜோசி ஆகியோர் பிரதமரின் முடிவை கைவிடுமாறுகேரியதன் பேரில்பிரதமர் தனது இராஜினாமாசெய்யும் அறிவிப்பை வாபஸ்பெறுவதாக தெரிவித்துள்ளார். (ந-5)

## தேன்நிலவைப்

கட்டுநாயக்கா வந்தடைந்த போதே, விமான நிலையத்தின் அனர்த்தத்தைக் கண்டு அதிர்ச்சியில் உறைந்தனர்,

இச்சம்பவத்தால் மனநிலை உடைந்த தேன்நிலவு தம்பதியர் ஸ்ரீபன், ஆங்சாங்லெங் தம்மை இத்தகையதொரு பாதுகாப்பற்ற விமான நிலையத்துக்கு அனுப்பி வைத்தமைக்காகவும், தமது தேன்நிலவின் மகிழ்வை இச்சம்பவம் பாதிப்படையச் செய்துவிட்டதையும் சுட்டிக் காட்டி, பிரஸ்தாப விமான முகவர் நிலையத்திடம் நட்டஈடுகோரியுள்ளனர்.

இதேவேளை தவறுதலாக இடம்பெற்ற இச் சம்பவத்துக்கு தாம் வருந்துவதாக விமான முகவர் நிலைய அதிகாரி சம்மந்தப்பட்ட தம்பதிகளிடம் மன்னிப்பு கோரியுள்ளார். (இ)

## இன்று 4வது கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ் விஞ்ஞானக்கழகத்தின் சமூகவிஞ்ஞானப் பிரிவினரின் 4வது கருத்தரங்குத் தொடர் இன்று யாழ் பல்கலைக்கழக புவியியற் துறை மண்டபத்தில் பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் சமூகவியல் அரசறிவியல்துறை வருகை விரிவுரையாளர் கலாநிதி எஸ்.கே. நாதன் 'சூழலைப் பாதுகாத்தலும், அபிவிருத்தியும்'' எனும் தலைப்பில் உரைநிகழ்த்தவுள்ளார். (வ)

## 7ம், 8ம் திகதிகளில் தாதியர் வேலை நிறுத்தம்

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு உட்பட நாடு பூராவும் உள்ள அரச வைத்தியசாலைகளில் கடமைபுரியும் தாதிமார் இம்மாதம் 7ம், 8ம் திகதிகளில் சுகயீனலீவுப் போராட்டத்தில் குதிக்கவுள்ளனர்.

பத்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து இப்போராட்டத்தில்தாதிமார்ஈடுபடவுள்ளதாக பொதுச் சேவைகள்ஐக்கிய தாதிமார் சங்கத்தின் தலைவர் முத்தெட்டுவ ஆனந்ததேரர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கதாதிமார் சேவையை நாடுதழுவிய சேவையாக பிரகடனப்படுத்துதல். தாதிமாருக்கான சீருடைக் கொடுப்பனவை அதிகரித்தல் தனியார் மருத்துவ நிலையங்களில் பயிற்சி பெறும் தாதிமாரை மருத்துவ கவுன்சிலில் பதிவு செய்யக்கூடாது போன்ற பத்துக் கோரிக்கைகளை தாதிமார் சங்கம்முன் வைத்துள்ளது. (வ)

## முக்கிய

படவேண்டுமென்றும், ஜனாதிபதி மாளிகை, பாராளுமன்றம், கொழும்பு துறைமுகம், சபுகஸ்கந்தை எண்ணெய்சுத்திகரிப்பு ஆலை, மத்திய வங்கி, இரத்மலானை விமானநிலையம்,மற்றும் கட்டுநாயக்கா விமான நிலையம் ஆகியவற்றின் பாதுகாப்பிலும் அதிக கவனம் செலுத்த வேண்டுமென்றும், லக்கி கொடித்துவக்கு மேலும் தெரிவித்தார்.

அத்துடன் சட்டத்தின் ஒவ்வொருவரியையும் அமுல்ப்படுத்துவதுடன், பொதுமக்களின் தகவல்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்கவேண்டுமென்றும் அவர்மேலும் தெரிவித்தார். (இ)

## சர்வஜன்

இச்சந்திப்பில் ஜே.வி.பியினர் பிரச்சாரச் செயலாளர் விமல்வீரவன்ச பொதுச் செயலாளர் தில்வன் சில்வா மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

ஜே.விபியினர் தாம்விடுத்த வேண்டுகோளுக்கு வேண்டிய நடவடிக்கைகளை ஜனாதிபதி எடுப்பாராக இருந்தால்தாம் அதற்குப் பரிகாரமாக சில நடவடிக்கைகள் மூலம் தியாகங்களைச் செய்யத தயாராக இருப்பதாகவும் ஜே வி பியினர் தெரிவித்துள்ளனர். (வ)

## கட்டுநாயக்கா

திடம் இருந்து எதிர்பார்க்கின்றோம்

அத்துடன் இலங்கையில் மட்டுமல்லாமல்விமானப்படைத்தளம் மீதுதாக்கப்பட்டுள்ளது என்றில்லாமல் உலகநாடுகள் பலவற்றின் விமானப்படைத்தளம் இவ்வாறு தாக்கப்பட்ட சம்பவங்கள் உள்ளன.

குறிப்பாக பிரித்தானிய விமானநிலையம் ஐ ஆர் ஏ அமைப்பினால் தாக்கப்பட்டதுடன் இச்சம்பவத்தின்போது முன்னாள் பிரித்தானிய பிரதமர் மார்க்கிறட்தட்சர் மயிரிழையில் உயிர்தப்பியமையும் யாவரும் அறிந்தவிடயமென்றும் அமைச்சர் காமினி சுட்டிக்காட்டினார். (இ)

## ஈ பி ஆர் எல் எவ்

இவர் ஏற்கனவே கடந்த மாதம் 17ம் திகதி இராணுவச் சிப்பாயுடன் சைக்கிளில் சென்ற சமயம் புலிகளின் சூட்டுக்கு இலக்காகிக் காயமடைந்தவர் என்பதும் அச்சமயம் இவருடன் சென்றசிப்பாய் பலியானமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (இ- 4)

## மும்முனை கிரிக்கெற்போட்டி இலங்கை அணியிடம் நியூசிலாந்து தோற்றது!

(கொழும்பு)

கொழும்பு பிறேமதாச விளையாட்டுமைதானத்தில் கொக்கோகோலா வெற்றிக்கிண்ணத்துக்கான, மும்முனை கிறிக்கெற்சுற்றுப்போட்டியில் நேற்று இடம்பெற்ற இலங்கை நியுசிலாந்து அணிகளுக்கிடையிலான ஆட்டத்தில் இலங்கை அணி 106 ஓட்டவித்தியாசத்தில் மகத்தான வெற்றியீட்டியது.

அரங்கில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி ஆறு விக்கெற் இழப்புக்கு 221 ஓட்டங்களைக் குவித்தது.பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய நியுசிலாந்து அணி ஒன்பது விக்கெற் இழப்புக்கு 115 ஓட்டங்களை பெற்று தோல்வியைத்தழுவியது. (இ-04)

## இந்துமதகுருபீடத்தினர் ஜனாதிபதியைசந்தித்தனர்

[கொழும்பு]

ஜனாதிபதிசந்திரிகா குமாரதுங்கா நேற்றுமாலை சர்வமதக் குழுவினருடன் பேச்சு நடத்தியுள்ளார் இப்பேச்சுவார்த்தையில் யாழ்ப்பாணத்திலிருந்து இந்துமத குருபீடாதிபதி சிவஸ்ரீ மகேஸ்வரக் குருக்கள் தலைமையில் சென்றஇந்து மத குருமாரும் கலந்துகொண்டனர்.

நேற்றுமாலை5 45மணிக்கு ஆரம்பமான சந்திப்பில் உரையாற்றிய ஜனாதிபதி ஐ. தே. கட்சியினால் மக்களிடம் ஆணைபெறாமல் தயாரிக்கப்பட்ட தனிமனித அதிகாரம் நிறைந்த ஜனாதிபதி முறையை இல்லாதொழிப்பதற்குமக்களின ஆணையைப் பெறவே சர்வஜனவாக்கெடுப்பு நடத்தப்படுகிறதென்றார். [ந]

## பேதுருவானவர் ஆலயத்தில் பூசை

[மண்டைதீவு]

மண்டைதீவு புனித பேதுருவானவர் ஆலயத்தின் வருடாந்த பூசை வழிபாடுகளை அந்நடாத்த முடியாமையால் அதன் பூசை நிகழ்வுகள் குருநகர் புனித பேதுருவானவர் சிற் ஆலயத்தில் இன்று புதன்கிழமை காலை 7மணிக்கு இடம்பெறும். [ந]

## ஒருவர் உயிரிழப்பு

மணலாற்றில் கடந்தசனிக்கிழமை இடம்பெற்ற படையினருடனான மோதலில் மேஜர் பரமசோதி அல்லது பரன் என்றழைக்கப்படும் புலிகளின் படைப்பிரிவுப் போராளி உயிரிழந்துள்ளதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர். [ந-4]

## மனித உரிமை

சரமாரியாகக் கேள்விகள் கேட்கவிருப்பதாக சர்வதேச மன்னிப்புச்சபையின் பேச்சாளர்ஒருவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையைத்தவிர கென்யா,சிம்பாவே,மலேஷியா ஆகிய நாடுகளின் மனித உரிமைமீறல்கள் தொடர்பாக முக்கியகவனம் செலுத்த விருப்பதாகவும் அவர்மேலும் தெரிவித்தார்.

இலங்கையில் அடிக்கடி மனிதஉரிமை மீறப்படுவதும் பெண்கள்பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்படுவதும் காணாமல்போவதும் அன்றாடம் நடைபெறும் நிகழ்ச்சிகளாக அமைந்துள்ளன என்பதும் இங்குகுறிப்பிடத்தக்கது. (வ)

## முன்பள்ளி விளையாட்டு

(யாழ்ப்பாணம்)

மல்லாகம் வித்தியோதய பாலர் பாடசாலையும், யாழ் சர்வோதய சிரமதான இயக்கமும் சேர்ந்து நடாத்தும் முன்பள்ளி மாணவர்களின் விளையாட்டு விழா இன்று பி.பகல் 2.00 மணிக்கு மல்லாகம் விசாலாட்சிவித்தியசாலை அதிபர் ந. மகேஸ்வரன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வுக்கு சர்வோதய செயற் திட்ட நிறைவேற்றுனர் எஸ், வி சங்கரப்பிள்ளை பிரதம விருந்தினராகவும், தெல்லிப்பளை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ந. சச்சிதானந்தம் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர். [இ]

## பொலிசாரால்

போது:

நிரந்தரநீதிபதியே இதற்கான ஆணையைப்பிறப்பிக்க வேண்டும் எனமன்றில் தெரிவிக்கப்பட்டது.

ஏனையசிறியரக ஆயுதங்களை இரசாயன பகுப்பாய்வு செய்து மன்றில அறிக்கை சமர்ப்பிக்குமாறும் நீதிபதி உத்தரவிட்டார்.

திவ்வியனின் வழக்குவிசாரணை இம்மாதம் 14ந்திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (உ-42.6)

## பொது...

அலுவலகத்தில் நடைபெறும்.

இவ்நிதி ஒதுக்கீட்டுக்கான காசோலையை பெற்றுக் [illegible] அமைப்புகளின் [illegible] செயலாளர்,பொருளாளர் மற்றும் நிர்வாகஉறுப்பினர்கள அனைவரையும் நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு பிரதேசசபைததலைவர் க. மணிபல்லவராஜன் கேட்டுள்ளார்.

நிதி ஒதுக்கீட்டை பெற்றுக் கொள்ளும் அமைப்புக்களின் பெயர் விபரம் நாளையவலம்புரியில் பிரசுரிக்கப்படும். (இ)

உங்களது நயம், நம்பிக்கை நாணயமுள்ள, தங்க வைர நகைகளுக்கு சிறந்த ஸ்தாபனம்

நியூ நகுலா ஜூவல்லறி

74, கஸ்தூரியார் வீதி, - - - யாழ்ப்பாணம்.

நியூ லலிதாஸ் ஜூவல்லறி
171, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்,

[கி/2195]

நகுலா நகைமாடம்
241C, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

இப் பத்திரிகை ''வலம்புரி'' அன்கோ ஸ்தாபனத்தாரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001;ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 1-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.